


# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 26 ★ 19.05.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்





## புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபடத் தவறினால் இலங்கை அரசு சர்வதேச கண்காணிப்பிலிருந்து மறைந்து போகும்

உண்மைக்கும் நீதிக்குமான அனைத்துலக அமைப்பின் தலைவர் யஸ்மின் சூக்கா அம்மையார் சிறப்பு நேர்காணல்.



## அவலங்கள்; அரங்கேறி பத்தாண்டுகள் தாயக, தமிழக, புலம்பெயர் தேசத்தின்

அரசியல், சிவில் சமூகத்தின் உள்ளத்து வலிகள்

## உலகம் எங்கும் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பத்தாண்டு நினைவேந்தலின் பதிவுகள் உள்ளே ➲

# உணர்வெழுச்சியுடன் முதல் தசாப்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## இனப்படுகொலைக்கு நீதிகோரி கண்ணீர் காணிக்கையுடன் கதறி அழுத உறவுகள்



இராணுவத்தின் தீவிர கழுகுப்பார்வைக்குள்ளும், காவல் துறையினர், புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்குள்ளும் சிறீலங்கா அரச பயங்கரவாதம் திட்டமிட்டு நிகழ்த்திய முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் முதலாவது தசாப்த நினைவேந்தல் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

நீதிகோரி காத்திருக்கும் உறவுகள் இன்னுயிர்களை ஈகம் செய்த அத்தனை உறவுகளை நினைந்துருகி கண்ணீரைக்காணிக்கையாக்கி கதறியழுது அஞ்சலி செலுத்தியதால் உணர்ச்சிப்பிளம்பால் உறைந்திருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்திடல் கனத்த நெஞ்சங்களையும் சுமந்து கொண்டிருந்தது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் (வடக்கு கிழக்கு ) ஏற்பாட்டில் தமிழின இனப்படுகொலை நினைவு நாள் அகவணக்கத்துடன் காலை 10.30இற்கு ஆரம்பமானது. அதனையடுத்து முள்ளிவாய்க்காலில் தனது தாய் இறந்துகிடப்பதை கூட அறியாது அந்த தாயிடம் தாய்ப்பால் அருந்திய போது தனது ஒரு கையை இழந்த ஞானசீலன் ராகினி என்ற சிறுமியால் பிரதான நிகழ்வான ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து பங்கேற்ற அனைத்து பொதுமக்களும் உயிரிழந்தவர்களுக்காக நினைந்துருகி



தொடர்ச்சி 4 ஆம் பக்கம் →

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் நினைவேந்தல் குழுவின் முள்ளிவாய்க்கால் பிரகடனம்

தமிழினத்தின் மீது நடந்தேறும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை ஐ.நாவும் சர்வதேச சமூகமும் வெறுமனே அவதானித்துக் கொண்டிருப்பது, கவலைக்குரியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் மே 18 பிரகடனத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துமாறும்



கோரப்பட்டுள்ளது.

தமிழினப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று காலை பத்து முப்பது மணிக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்தில் இடம்பெற்றது. இங்கு மே 18 பிரகடனம் வெளியிடப்பட்டது. குறித்த பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

“தமிழர்களுக்கு எதிராக, இலங்கை பேரினவாத அரசு வரலாற்றில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து, கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை கட்டம் கட்டமாக அரங்கேற்றி வந்துள்ளது. இந்த இனப்படுகொலை முள்ளிவாய்க்காலில் அதி உச்சத்தை அடைந்து இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட எமது இரத்த உறவுகளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம். கொல்லப்பட்ட எமது உறவுகளின் கனவுகளை நினைக்கின்றோம். முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தின் ஒரு தசாப்தத்தை நினைவுகூரும் ஒட்டுமொத்த தமிழினம் அவலங்களை மட்டும் நினைவு கூரவில்லை.

பேரினவாத அரசாங்கத்தின் அடக்கு முறைக்கெதிராக தமிழினம் வெகுண்டெழுந்த வரலாற்றையும் அவற்றின் வெவ்வேறு வடிவங்களையும், கூட்டு உரிமைக்கான தியாகத்தையும் நினைவு கூருவது எமது ஒவ்வொருவரதும் வரலாற்றுக்கடமை.

தமிழர் உரிமைக்கான போராட்டத்தை அரசாங்கம் பயங்கரவாத முத்திரை குத்தி அதன் நியாயத்தன்மையை கேள்விக்குட்படுத்தி வந்துள்ளது. சர்வதேச மயப்படுத்தப்பட்ட பயங்கரவாத பிரச்சாரத்தினூடு ஆயுதப்போராட்ட வடிவம் மௌனிக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் ஆயுத மௌனிப்பின் பின் தமிழர் போராட்ட வடிவங்கள் வெவ்வேறு வழிகளில் முன்னெடுக்கப்பட்டன. பின் முள்ளிவாய்க்கால் தசாப்தத்தில் வரலாற்றில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான நீதி வேண்டிய கோரிக்கை வலுப்பெற்றது.

தமிழர்கள் ஓர் இன அடையாளத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக கொல்லப்பட்டார்கள், சித்திரவதை செய்யப்பட்டார்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார்கள், வன்புணரப்பட்டார்கள். பூர்வீக வாழ்விடங்களிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டார்கள். தமிழர்கள் வந்தேறு குடிகளாக சித்தரிக்கப்பட்டு சிறிலங்கா சிங்கள-பௌத்த தேசம் அது சிங்கள-பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானது என காலணித்துவத்தில் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் நவ காலணித்துவத்தை கட்டமைத்தது. இது தமிழினத்தின் ஒட்டுமொத்த இருப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ளது” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழினத்தின் மீது நடந்தேறும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை ஐ.நாவும் சர்வதேச சமூகமும் வெறுமனே அவதானித்துக் கொண்டிருப்பது கவலைக்குரியதாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான நீதிவேண்டி தமிழர்கள் ஒரு தசாப்த காலமாக ஐ.நாவின், சர்வதேச சமூகத்தின் உதவியை நாடியுள்ளார்கள். நடந்தேறிய

தொடர்ச்சி 4 ஆம் பக்கம் →

## இலங்கையை இனிமேலும் பாதுகாக்கும் வகையில் சர்வதேசம் செயற்படக்கூடாது கூட்டமைப்பையும் கண்டிக்கிறது

### தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம்

பாரிய இனப்படுகொலையுடன் இலங்கையில் போர் முடிவுக்கு வந்து பத்து வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. போரால் ஏற்பட்ட விளைவுகளுக்கான நீதியும் வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் இதற்கு மேலும் இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, ஐ.நா. சபையோ, சர்வதேச சமூகமோ செயற்படக்கூடாது எனவும் வலியுறுத்தியிருக்கின்றது.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டிருந்தாலும், மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். இந்தப் போராட்டங்கள் முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகள் எதனையும் காண முடியவில்லை. பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்த அதே நிலையில்தான் தமிழர்கள் இன்றும் உள்ளார்கள் எனவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் 10 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்திருக்கின்றது. இந்த அறிக்கையில் மேலும் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

"முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட 10 ஆவது ஆண்டை தமிழ் மக்கள் சனிக்கிழமை நினைவு கூர்ந்தார்கள். நினைவுகூரல் என்பதற்கு அப்பால் இதில் பல செய்திகளும் உள்ளன. இனப்படுகொலைக்குள்ளான மக்களுக்கான நீதி இன்னமும் வழங்கப்படவில்லை. காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. வடக்கு, கிழக்கு தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளாகவே உள்ளன. இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள ஆயுதப் படையினரின் எண்ணிக்கையுடன் பார்க்கும் போது, அதிகளவான படையினர் அங்கு குவிக்கப்பட்டிருக்கின்றார்கள். போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு பத்து வருடங்களின் பின்னரும் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கப்பட்ட பூமியாக வைத்திருக்க சிங்கள அரசாங்கம் விரும்புவதன் நோக்கம் என்ன?

பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வைக்காண்பதற்கு அரசாங்கம் விரும்பவில்லை என்பதைத்தான் இது உறுதிப்படுத்துகின்றது. பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொடுக்காவிட்டால் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுவார்கள். அவர்களை அடக்க, அச்சுறுத்த படையினரின் அதிகரித்த பிரசன்னம் அவசியம் என அரசாங்கம் கணக்குப் போடுகின்றது. மக்களுடைய காணிகள் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் இருக்கும் போது மீள்குடியேற்றம் என்பது கூட கேள்விக்குள்ளாகின்றது. இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானவர்கள், குறிப்பாக தமிழகத்தில் தஞ்சமடைந்தவர்கள் தமது இடங்களுக்குத் திரும்பமுடியாத நிலைக்கு இது காரணம்.

தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினையும் இதுவரை தீர்க்கப்படவில்லை. இது குறித்து கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இவை அனைத்தும் போரின் விளைவுகள். போருக்குக் காரணமாக இருந்த

தொடர்ச்சி 4 ஆம் பக்கம் ➔

## பத்தாமாண்டு நினைவேந்தல் புத்தெழுச்சியும் புதிய நம்பிக்கையும் தருமா?

முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்து பத்தாண்டுகள் நிறைவடைந்து விட்டன. பத்தாவது ஆண்டு நிறைவின் நினைவேந்தல்கள் தமிழன் உயிர்ப்போடு, துடிப்போடு இருக்கின்ற அத்தனை நாடுகளிலும் இடம்பெற்றிருக்கின்றன. பேரவலம் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் மண்ணிலும் அண்மையில் இடம்பெற்ற அனர்த்தங்களுக்கு பின்பு கூட உணர்வுபூர்வமாக நினைவேந்தப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்காலின் இறுதி நாட்களில் தாய் இறந்த பின்பும் தாய்ப்பால் அருந்த முற்பட்ட எட்டு மாதக் குழந்தை முள்ளிவாய்க்காலில் முதலாவதாக சுடரேற்றிய நிகழ்வும் பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. ஒப்பீட்டளவில் அண்மைய வருடங்களை விட புலம்பெயர் நிலங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் அதிகளவிலான மக்களின் பங்கெடுப்போடும் இடம்பெற்றிருந்தது.

இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்த இந்தப் பேரவலத்துக்கும் இனவழிப்புக்கும் நீதி தேடும் தமிழர்களின் முயற்சி கடந்த பத்தாண்டுகளாக மிக மந்த கதியிலேயே நகர்ந்துள்ளன. இயல்பாகவே தங்களை நீண்டகாலமாக முன்னின்று வழிநடாத்தி வந்த ஒரு பேரியக்கத்தின் வழிகாட்டல் திடீரென்று இல்லாமல் போகின்றபோது அதிலிருந்து மீண்டெழுந்து தம்மை மீளொழுங்கு செய்வதற்கு ஓரளவான காலம் எடுக்கும். ஆனாலும் பத்தாண்டுகள் கடந்த நிலையிலும் கூட எமக்குள் மீளாய்வும் கலந்துரையாடலும் கருத்தொருமிப்பும் பொது வேலைத்திட்டமும் இன்னமும் இல்லாதிருப்பது வேதனையானது. பத்தாமாண்டு முள்ளிவாய்க்கால் நிகழ்வைக் கூட ஒன்றாக நடாத்த முடியாதபடி பல்வேறு காரணங்களை முன்வைத்து விட்டுக்கொடுப்புக்களின்றி ஒரே நேரத்தில் ஏறத்தாழ ஒரே இடத்தில் வெவ்வேறு நிகழ்வுகளை நடாத்தியதும் வேதனைக்கும் விசனத்துக்கும் உரியது.

பாதுகாப்பானதாக அறிவிக்கப்பட்ட பிரதேசத்தில் கனரக ஆயுதங்களைக் கொண்டு கொடூரமான தாக்குதல்களை மேற்கொண்டதும், உணவு மருந்துகளை போதியளவு அனுப்பாமல் பட்டினி மற்றும் வைத்திய வசதியின்றிய சாவுகளுக்கு வழிகோலியதும், மருத்துவ மனைகள் என்று தெரிந்தும் எறிகணை தாக்குதல்களை மேற்கொண்டதும், தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை பாவித்ததும், சாட்சியங்களோடு கையளித்தவர்களை காணாமல் செய்ததும், சர்வதேச அனுசரணையோடு வெள்ளைக்கொடியோடு சரணடைந்தவர்களை கொன்று குவித்ததும், மிருகத்தனமான பாலியல் சித்திரவதைகள் புரிந்ததுமென ஐ.நாவின் நியமங்கள், சர்வதேச போர் நியமங்கள், நடைமுறைகள் எல்லாவற்றையும் மீறிய சிறீலங்கா அரசின் காட்டுமிராண்டி ஆட்சிக்கான தண்டனை இன்னமும் கிடைக்காமல் இருப்பது தேசப்பற்றுள்ள எந்த தமிழ் மகனையும் மகளையும் உள்ளார்ந்தமாக நிச்சயம் பாதிக்கும். அணையாத தீயாக அது அகநிலையில் எரிந்த வண்ணமே இருக்கும்.

வெறும் வருடாந்த நிகழ்வுகளும் கொட்டொலிகளும் இதற்கான தீர்வாக அமைந்து விடப் போவதில்லை. நீதிக்கான எங்கள் பயணம் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் மேல் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவழிப்பை நிரூபிக்கக் கூடிய அத்தனை சாட்சியங்களை சேகரிப்பதிலும் பாதுகாப்பதிலும் அதனை உலகில் உண்மையான சமூக ஆர்வலர்களை, நீதிக்காக குரல் கொடுப்பவர்களை அணிதிரட்டி சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் எமக்கான நீதியை நாம் பெற்றுக் கொள்ளும் அந்த அர்ப்பணிப்பு மிக்க பயணத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். நான் பெரிது நீ பெரிதென்று வாழாமல் நாடு பெரிதென்று வாழுங்கள் என்ற தேசியத் தலைவனின் கூற்றை வெறும் வார்த்தைகளில் மட்டும் பயன்படுத்தாது வாழ்வியலில் அதனை நெஞ்சார கடைப்பிடிக்க வேண்டும்.

கடந்த பத்தாண்டுகளும் எமக்கிடையே ஆயிரம் பேதங்களை ஏற்படுத்தி விட்டிருக்கின்றது. இன்னுமொரு பத்தாண்டுகள் இவ்வாறே கடந்து போனால் எல்லாமே அடங்கி ஒடுங்கி விடும். அடுத்த பத்தாண்டுகளில் நாம் எங்களது அடுத்த தலைமுறையிடம் நீதிக்கான எங்களது பயணத்தை உரிய முறையில் கையளித்தாக வேண்டும். அதனை நாம் சரிவர செய்ய வேண்டுமாக இருந்தால் தமிழ்த் தேசிய அரசியல் பயணத்தில் பங்கெடுப்பவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான ஆரோக்கியமான கலந்துரையாடல்களை காலந்தாழ்த்தாது ஆரம்பிக்க வேண்டும். எங்களுக்குள் இருக்கின்ற இடைவெளிகளை பாவிப்பதிலேயே எங்கள் எதிரிகளும் துரோகிகளும் குறியாக இருக்கின்றார்கள். எங்களது ஒன்றிணைந்த செயற்பாடுகள் மட்டுமே தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்தும் சக்திகளை பலவீனப்படுத்தும். முள்ளிவாய்க்காலில் நாம் முக்கியமாக இழந்து போனது தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்தும், சிதைக்கும் எண்ணங்களுக்கும் செயற்பாட்டிற்குமான பயமின்றிப் போனதே. நாம் மீண்டும் ஓரணியில் ஒரே குரலில் ஒரே நிலைப்பாட்டில் நிற்கின்றபோது இழந்தவை அனைத்துக்குமான பலன் பயன் எம்மை வந்து சேரும். முள்ளிவாய்க்காலின் பத்தாமாண்டு நினைவேந்தல் அதற்கான முயற்சியையும் எழுச்சியையும் வல்லமையையும் எங்களுக்கு வழங்கட்டும்.

2 ஆம் பக்க தொடர்ச்சி →

## உணர்வெழுச்சியுடன்

சுடர்களை ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரியும், இனப்படுகொலையாளிகளை குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தக்கோரியும், அந்நிய மீட்பார்களை தவிர்த்து மக்கள் சக்தியில் அணிதிரள்வோம் என்ற உறுதிப்பாட்டையும் தமிழர்களுக்கு சுயாட்சி தீர்வு வலியுறுத்தலையும் உள்ளடக்கிய மே 18 பிரகடனம் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

இறுதியாக நினைவேந்தல் நிகழ்வில் முள்ளிவாய்க்காலில் 2009 ஆம் ஆண்டு



மக்கள் உணவாக உட்கொண்டு பசிபோக்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சி அனைவருக்கும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள், சமயத்தலைவர்கள், சமூகப்பிரதிநிதிகள், சிவில் தரப்பினர், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு வடக்கில், யாழிலும், மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழகத்தினுள்ளும், முல்லைத்தீவு நந்திக்கடலிலும், மன்னாரில் பொதுஒன்றியங்களின் ஏற்பாட்டிலும், வவுனியாவில் உள்ள இந்து ஆலயங்களிலும், கிளிநொச்சியில் இருவேறு இடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில், வாகரை, ஆரையம்பதி, காரைதீவு, வெல்லாவெளி ஆகிய பகுதிகளிலும் திருகோணமலை சிவன் கோவிலிலும், அம்பாறை திருக்கோவில் விநாயகர்புரத்திலும், நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

3 ஆம் பக்க தொடர்ச்சி →

## இலங்கையை இனிமேலும் பாதுகாக்கும்

இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வு கூட இலங்கை அரசாங்கத்தினால் வழங்க முடியவில்லை. அரசாங்கம் முன்னெடுக்கும் பேச்சுக்கள் வெறுமனே காலத்தைக் கடத்துவதற்கான உபாயங்களாகவே இருந்து விடுகின்றன. இதுவரையில், இனநெருக்கடியைத் தீர்ப்பதற்கான உருப்படியான திட்டங்கள் எதனையும் அரசாங்கம் முன்வைக்கவில்லை.

2015 இல் ஆட்சி மாற்றத்துக்கு காரணமாக இருந்த சர்வதேச சமூகமோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ , இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்கான அழுத்தத்தை அவர்களால் கொண்டுவரப்பட்ட அரசாங்கத்துக்கு உரிய முறையில் கொடுக்கவில்லை. அதனால், கடந்த நான்கு வருடங்கள் கூட அர்த்தமற்றதாகவே போய்விட்டது.

கூட்டமைப்பினர் அடுத்த தேர்தலை இலக்காகக் கொண்டு கம்பரலிய போன்ற திட்டங்களைப் பெற்றுக்கொள்வதில் காட்டிய அக்கறையை தமிழர் பிரச்சினையில் காட்டவில்லை. தமிழகத்தையும், புலம்பெயர்ந்த தமிழர்களையும் இணைத்துக்கொண்டு பொதுவான வேலைத் திட்டம் ஒன்றை உருவாக்க அவர்கள் தவறிவிட்டார்கள். தமிழ் மக்கள் பெற்றுக்கொடுத்த 16 என்ற பாராளுமன்ற எண்ணிக்கையை வைத்துக்கொண்டு சாதித்திருக்கக்கூடிய அனைத்தையும் தவறவிட்டார்கள். இதனால், 2009 இல் இருந்த நிலையில்தான் தமிழினம் இன்றும் உள்ளது. இதன் அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்வதற்குத் தேவையான திட்டமிடல் எமக்கு அவசியம். அர்ப்பணிப்புடன் கூடிய தலைமை தேவை. ஒன்றுபட்ட செயற்பாடு முக்கியம்.

இவற்றில் இன்று கூட நாம் கவனம் செலுத்தவில்லையெனில் வரப்போகும் வருடங்களும் இவ்வாறு அர்த்தமற்றவையாகவே போய்விடும்."

2 ஆம் பக்க தொடர்ச்சி →

## இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்

அநீதிகளையும், உரிமை மீறல்களையும் விசாரிப்பதற்கான சர்வதேச நீதி விசாரணை இன்னும் ஆரம்பித்ததாகத் தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம், முள்ளிவாய்க்கால் வரலாற்றுத் தளத்தில் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் சிங்கள-பௌத்த மயமாக்கத்தையும், இராணுவ மயமாக்கத்தையும் விஸ்தரித்து இராணுவ இருப்பை நியாயப்படுத்தி தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தமிழர்களின் பூர்வீக நிலங்கள் படைத்தரப்பாலும், மகாவலி அபிவிருத்தி திட்டத்தாலும், தொல்லியல், வனவளத் திணைக்களங்களாலும் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழர் மத்தியில் அரசாங்கம் பயத்தை தக்க வைத்துக் கொண்டு உளவியல் யுத்தம் செய்து கொண்டிருக்கின்றது. ஆயுதம் மௌனிக்கப்பட்டு ஒரு தசாப்தமாகியும் கைதுகளும், எச்சரிக்கைகளும், மிரட்டல்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன. பேச்சுரிமைக்கான வெளி நசுக்கப்பட்டுள்ளது.

ஒரு தேசத்தின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை பேணிப்பாதுகாப்பதற்கு அடிப்படையான பூரண அரசியல் சுதந்திரத்தை அனுபவிப்பதென்பது எல்லா தேசங்களினதும் விட்டுக்கொடுக்கவே முடியாத அடிப்படை உரிமையாகும். சமூக கட்டுமானத்தின் அனைத்து அடிப்படை அம்சங்களிலும் சிங்கள தேசத்தில் இருந்தும் தனித்துவமாக வேறுபடுத்திப் பார்க்கக் கூடிய தனி சிறப்பியல்பான அம்சங்களைக் கொண்டிருப்பதன் மூலம் இலங்கைத்தீவில் தமிழர்கள் ஒரு தேசமாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

பெரும்பான்மையினருக்கு இருப்பது போன்று அதைவிட தொன்மையானதும் செழிப்பானதுமான வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டிருப்பதினாலும், சிங்கள மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட மிகத்தொன்மையான மொழிப்பாரம்பரியத்தைக் கொண்டிருப்பதோடு காலத்திற்கேற்ற நவீன மாற்றங்களை தன்னகத்தே உள்ளீர்த்து தனித்துவமான மொழியைக் கொண்டிருப்பதாலும், இலங்கைத்தீவில் வட-கிழக்கு பகுதியை தமிழ் தாயகமாகக் கொண்டு வரலாற்றுப்பூர்வ குடிகளாக வாழ்வதாலும், சிங்கள அரசானது திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு மூலம் இலங்கைத்தீவில் தமிழர்களின் இருப்பை அழிப்பதற்கான எத்தனங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் ஒரு தசாப்தம் நிறைவடைந்தும் நினைவு கூருவதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. நினைவு கூருவது பாதிக்கப்பட்ட மக்களின் உரிமை. நினைவு கூருவதற்கான உரிமை மறுக்கப்படுவது உண்மையை மறுப்பதும் மறைப்பதுமாகும். சிறிலங்கா அரசு மறுப்புவாதத்தை நிறுவனமயப்படுத்தி உண்மைகளை வரலாற்றில் மறுத்து வந்துள்ளது. சாட்சியங்களை பொய்யர்களாக்கி அவர்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்துகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின், கையளிக்கப்பட்டவர்களின் விசாரணை கிடப்பில் போடப்பட்டுள்ளது. குற்றவாளிகள் தொடர்ந்தும் வெற்றி வீரர்களாக உலா வருகின்றனர்.

பின் முள்ளிவாய்க்கால் வரலாற்றுத் தசாப்தத்தில் ஒன்று கூடியுள்ள தமிழ் மக்களாகிய நாங்கள் நினைவுகூரலை அணி திரட்டலாக மாற்ற வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

அந்நிய மீட்பர்களை விடுத்து மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்து, நினைவு கூரலை சமூக இயக்கமாக மாற்றி சபதம் செய்வோம். எங்கள் உறவுகளின் கல்லறைகளின் மீது சத்தியம் செய்வோம்.

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டி இனப்படுகொலையாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்துக்குரியவர்கள் என்பதையும் தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் ஒரு போதும் பாரதீனப்படுத்தப்பட முடியாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என்பதையும் தமிழர்கள் சார்பில் கோரி- தமிழர் இன அடையாள இருப்பின் மீது கட்டவிழ்க்கப்பட்டுள்ள இனப்படுகொலையைத் தடுக்க- தமிழர் சமூக அமைப்புக்களை பலப்படுத்தி விடுதலைக்காக முனைப்புடன் உழைக்கவும்- மக்கள் பலத்தை நம்பி நினைவுகூரலை போராட்ட வடிவமாக, சமூக இயக்கமாக மாற்ற வேண்டிய சூழலுக்குள் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது.

அடக்குமுறைக்குள் வாழும் சமூகத்திற்கு நினைவுகூரல் ஒரு போராட்ட வடிவமே. தமிழ்த் தேசிய நினைவுத்திறம் அடக்குமுறைக்கெதிரான ஊடகம் என்பதை நினைவிற் கொண்டு உறுதிபூணுவோம் தமிழர் உரிமையை வென்றெடுப்பதற்கான பயணிப்பில் இணைவோம்.

இன்றைய நாளை இன அழிப்புக்கு எதிரான தமிழ் தேச எழுச்சி நாளாகவும் 2019ஆம் ஆண்டை இன அழிப்புக்கு எதிரானதும் அரசியல் நீதிக்கான சர்வதேச வலுச்சேர்க்கும் ஆண்டாகவும் பிரகடனம் செய்கிறோம் எனவும், அந்தப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபடத் தவறினால் இலங்கை அரசு சர்வதேச கண்காணிப்பிலிருந்து மறைந்து போகும்

## உண்மைக்கும் நீதிக்குமான அனைத்துலக அமைப்பின் தலைவர் யஸ்மின் சூக்கா அம்மையார் சிறப்பு நேர்காணல்.

**மனிதமும் தர்மமும் மரித்து விட்ட உலகின் ஒரு நம்பிக்கை ஒளியாக விளங்குபவர் யஸ்மின் சூக்கா அம்மையார் அவர்கள். உண்மைக்கும் நீதிக்குமான அனைத்துலக அமைப்பின் பொறுப்பை ஏற்று மனித உரிமை தளத்திலே ஒடுக்கப்படும் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் இன மத மொழிகளை கடந்து தொடர்ந்து குரல் கொடுத்துவருகிறார். ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட இன அழிப்பு செயற்பாடுகளையும், இறுதி யுத்தத்திலே இலங்கை அரசு மேற்கொண்ட போர் குற்றங்களுக்காகவும் பாதிக்கப்பட்டவர்களின் குரலாக அவர் தீவிரமாக கடமையாற்றிவருகிறார். குறிப்பாக இலங்கை அரசபடைகள் தமிழ் பெண்கள் மீது மேற்கொண்ட வன்முறைகளின் சாட்சியங்களை தொகுத்து ஐ.நா.மன்றத்திடம் கையளித்து உலகில் உள்ள தமிழர்களின் கவனத்தை ஈர்த்தவர்.**

**வினா : இலங்கையில் போர் முடிந்து 10 ஆண்டுகள் நிறைவுபெறுகின்ற இத்தருணத்தில், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொள்வதில், உலகெங்கும் பரந்திருக்கின்ற தமிழ் அமைப்புக்களின் முயற்சிகளை நீங்கள் எப்படி மதிப்பீடு செய்கின்றீர்கள்?**

பதில் - இதனைப் பலகோணங்களில் நோக்கலாம். என்னைப் பொறுத்த வரையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மிகவும் பலமானவர்கள். ஆனால் அவர்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து பணியாற்றுகிறார்களா என்பது எனக்குத் தெரியாது.

பொதுவாக தாங்கள் மேற்கொள்ளுகின்ற முயற்சியின் மூலம் யார் அதிகமாக சாதிக்கின்றார்கள் என்ற போட்டி மனப்பான்மை அவர்களுக்கிடையில் காணப்படுகின்றது.

சர்வதேச கடமைகளைப் பொறுத்தவரையில் இலங்கை அரசு தனது பங்கை தான் சரிவர ஆற்றுவதற்கான அழுத்தத்தை கொடுக்கவேண்டுமானால் தமிழ் அமைப்புகள் ஒன்றுபட வேண்டியது கட்டாயமானதாகும்.

தமிழ் அமைப்புக்கள் தாங்கள் வதியும் நாடுகளிலுள்ள அரசுகள் சரியான



நடவடிக்கைகள் முன்னெடுக்கும்வண்ணம் இன்னும் அதிகமான அழுத்தத்தை பிரயோகிக்கலாம். இந்தத் தமிழ் அமைப்புக்கள் தங்களது ஆற்றலை பயன்படுத்துகிறார்களா அல்லது அதனை உணர்ந்துகொள்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது.

உதாரணமாக, போர் மிகவும் உக்கிரமடைந்திருந்த நேரத்தில் ரொறன்ரோ போன்ற ஒரு நகரத்தை ஸ்தம்பிதம் அடையச்செய்யும் ஆற்றல் அவர்களுக்கிருந்தது.

ஆகவே கனேடிய, பிரித்தானிய, அமெரிக்க அரசுகள் மட்டில் இதுவரை எதற்காக அவர்கள் அதிக அழுத்தத்தை பிரயோகிக்கவில்லை என்பது நியாயபூர்வமான வினாவாகும்.

புகைப்படங்கள் எடுப்பதைவிட அதிகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவர்கள் தங்களால் செய்யக்கூடியவற்றையெல்லாம் செய்தார்களா என்பது வினாக்குறியே.

மற்றைய விடயம் என்னவென்றால், ஒரு சந்தர்ப்பத்தில் புலம்பெயர்ந்த அமைப்புகள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு இருந்தன. இலங்கை அரசு தான் செய்யவேண்டிய பணிகளைச் செய்வதற்கு உரிய அழுத்தங்களை இத்தமிழ் அமைப்புகள் பிரயோகித்தார்களா என்பது தெரியவில்லை.

அமைப்புகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து செயற்படவேண்டிய அவசியம் இருக்கின்றது. மீண்டும் ஒருதடவை ஐ.நா. ஒரு வெறுமையான தீர்மானத்தை கொண்டுவராமல் இருப்பதற்கும் ஐ.நா. தனது கடமையை சரியாக செய்வதற்கும் தாம் செய்யவேண்டிய ஐந்து விடயங்கள் எவை என்பதை இந்த அமைப்புகள் ஒன்றாக இணைந்து சிந்திக்கலாம்.

நீங்கள் வாழுகின்ற நாடுகளில் உள்ள அரசுகள் மட்டில் அழுத்தத்தை பிரயோகிப்பது மட்டும் போதாது. அத்துடன் ஜெனீவாவிற்கு போவதாக இருந்தால் அங்கு போவதன் நோக்கம் என்ன என்பதைப்பற்றியும் ஆராய வேண்டும்.

உண்மையில் ஜெனீவாவில் என்ன செய்யவேண்டும் என்பதையும் அங்குள்ள இடைவெளியை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதையும் இவர்கள் சரியாக புரிந்திருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது.

2009 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியை பின்னோக்கிப் பார்க்கும் போது, அக்காலப் பகுதியில் உருவாக்கப்பட்ட விடயங்கள் அதிவிசேடமானவை. என்னைப் பொறுத்தவரையில் மற்றைய நாடுகளிலுள்ள ஏனைய போராட்டங்களுக்கு உதவுவதற்கு தமிழ் அமைப்புக்களிடமிருந்து நான் நிறையவே கற்றுக்கொண்டேன்.

நவீன கணனி நுட்பங்களை திறமையாகப் பயன்படுத்தி சிறப்பான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது அப்படிப்பட்ட அறிக்கைகள் உருவாக்கப்படுகின்றனவா என்பது வினாக்குறியே. ஐ.நா. மேற்கொண்ட தீர்மானத்தின் ஏனைய அம்சங்களைப் பொறுத்தவரையில் ஐ.ரி.ஜே.பி. அமைப்பு நாட்டிற்கு உள்ளே இருப்பவர்களுக்கும் சரி வெளியே இருப்பவர்களுக்கும் சரி செயற்படுவதற்கான வழிவகைகளை



திறந்துவைத்திருக்கின்றது.

உதாரணமாக, நில காணி விடயம் தொடர்பாக என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது? உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? எவ்வளவு மக்கள் தங்களுடைய சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பியுள்ளார்கள்? இப்படிப்பட்ட விடயங்கள் ஆதாரபூர்வ அறிக்கைகளாக தயாரிக்கப்பட வேண்டும்.

ஜெனீவாவுக்குச் சென்று ஐ.நா. தீர்மானத்தைப்பற்றி பேசும்போது மேற்படி விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசு எதுவுமே செய்யவில்லை என்பதை நாங்கள் நிரூபிக்கலாம்.

உண்மையில் இப்படிப்பட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு கடுமையான உழைப்பு அவசியம். இலகுவில் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் தகவல்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். ஆரம்பகால அறிக்கைகள் அவற்றைக் கொண்டிருந்தன.

நவீன உத்திகளைப் பயன்படுத்தி, இலகுவாக புரிந்துகொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் இருக்குமானால், அவற்றின்மூலம் தற்போதைய இராணுவ மயமாக்கலை ஆதாரபூர்வமாக நிரூபிக்கலாம். இப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

அடுத்த ஜெனீவா அமர்வுக்கு முதல் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபட்டு இத்தகைய முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும். இவ்வாறு அவர்கள் செயற்படத் தவறினால் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பிலிருந்து இலங்கை அரசு மறைந்துபோகக்கூடிய அபாயம் இருக்கின்றது.

ஐ.நா.வுக்கு செல்வதால் என்ன பலன் என்று பலர் வினா எழுப்புகின்றார்கள்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம் →

## தொடர்ச்சி ➔

சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை அரசு தொடர்ந்து இருப்பது முக்கியமானது. ஏனெனில் அப்பொழுதுதான் இலங்கை அரசின் செயற்பாடுகள் சர்வதேச சமூகத்தினால் கண்காணிக்கப்படும்.

இதன்மூலம் மற்றைய நாடுகளும் இலங்கை அரசின் செயற்பாடுகள்பற்றி தீர்ப்பிடுவதற்கு ஏதுவான நிலையிருக்கும். ஏனைய நாடுகள் இலங்கை அரசின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கு தமிழ் அமைப்புக்கள் அயராது உழைக்கவேண்டும். அதுமட்டுமன்றி அவர்கள் ஐ.நா. மட்டிலும் அதிகமான அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும். வெறுமனே துறைசார் வளங்களை வழங்கும் கதையை ஐ.நா. நிறுத்தி மனித உரிமைகளை கண்காணிக்கும் பணியில் ஐ.நா. அதிக கவனத்தை செலுத்தவேண்டும் என்பது வலியுறுத்தப்படவேண்டும்.

கடந்த சில வாரங்களாக இலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு நடக்கும் விடயங்கள் தொடர்பாகவோ அல்லது முஸ்லிம் பெண்கள் முகத்தை மூடி அணியும் நிக்காப் அணிவது தடைசெய்யப்பட்டது தொடர்பாகவோ ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு எந்தவிதமான அறிக்கைகளையும் வெளியிடாது மௌனமாக இருக்கின்றது.

ஆகவே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் உண்மையில் என்ன செய்யவேண்டும் என்றால், நீங்கள் இதை செய்யுங்கள் நாங்கள் இதை செய்கிறோம் என்று தமக்கிடையே வேலைத்திட்டங்களை பகிர்ந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட விடயங்கள் ஆராயப்படாவிட்டால் இலங்கை அரசு சர்வதேசத்தின் கண்காணிப்பிலிருந்து தப்பித்துவிடும். உலக அளவில் இன்று மனித உரிமைகள் விலங்கிடப்பட்டிருக்கும் ஒரு மோசமான காலகட்டத்தில் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மனித உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுக்காத பல நியாயமற்ற அரசுகள் எங்கும் வியாபித்திருக்கின்றன.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரிலே நீங்கள் எங்களுடன் இணைவீர்களானால் உங்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்ய நாங்கள் தயாராகவிருக்கிறோம் என்று அரசுகள் கூறுகின்ற இந்தச் சூழலில் மனித உரிமைகள் என்பதன் முக்கியத்துவம் மறைந்துபோகின்றது. இனிவரும் காலங்களில் இதுதொடர்பாக நாம் விழிப்பாக இருக்கவேண்டும்.

---

## இலங்கையில் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் அவசியம் - கனேடிய பிரதமர்!



இலங்கையில் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் பொறிமுறைமை உருவாக்கப்பட வேண்டும் என்று கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே தெரிவித்துள்ளார். இலங்கையில் போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு பத்து ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

26 ஆண்டுகளாக நீடித்து வந்த யுத்தம் பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது, முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போதும் அதற்கு முன்னரும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன், பல்லாயிரக் கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். யுத்தம் நாடு முழுவதிலும் ஆறா காயங்களை ஏற்படுத்திச் சென்றுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த ஒரு தசாப்த காலமாக யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் கனேடியர்கள் பலரை தாம் தனிப்பட்ட ரீதியில் சந்தித்துள்ளதாகவும் அவர்களின் வலிகள் வேதனைகளை கேட்டறிந்து கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கனேடியர்களுடனான சந்திப்புக்களின் ஊடாக இலங்கையில் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவது மிக நீண்ட பயணம் என்பதனை புரிந்து கொண்டதாகத் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்டவர்களினால் நம்பக்கூடிய வகையிலான பொறுப்புக் கூறல் பொறிமுறைமை ஒன்றை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மற்றும் உள்நாட்டு ரீதியில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் இந்த பொறுப்புக்கூறல் பொறிமுறைமை அமையப் பெற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். யுத்தம் காரணமாக சொந்தங்களை இழந்த, பல்வேறு வழிகளில் இழப்புக்களை எதிர்நோக்கிய மற்றும் பாதிப்புக்குள்ளான அனைவருக்கும் கனேடிய அரசாங்கம் சார்பில் ஆழ்ந்த இரங்கல்களையும் வருத்தத்தையும் வெளியிட்டுக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற தீவிரவாத தாக்குதல்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அனைத்து மக்களும் தங்களது நம்பிக்கைகளின் ஊடாக வழிபாடுகளில் ஈடுபடக்கூடிய சுதந்திரம் இருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். கனடாவின் வளர்ச்சிக்கு தமிழ் கனேடியர்கள் வழங்கி வரும் பங்களிப்புக்களை அனைத்து கனேடியர்களும் அங்கீகரிக்க வேண்டுமென இந்த சந்தர்ப்பத்தில் கோருவதாக பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே தெரிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால் படுகொலை ஒரு இனப்படுகொலையாகும் - கனடா எதிர்க்கட்சித் தலைவர்



முள்ளிவாய்க்காவில் இடம்பெற்ற தமிழ் மக்கள் மீதான படுகொலையின் 10 ஆவது நினைவுதினம் எதிர்வரும் 18 ஆம் நாள் நினைவுகூரப் படவுள்ளது. இந்த நினைவு தினத்தில் தமிழ் மக்களுடன் இணைந்து கொள்வதற்கு நானும் விரும்புகின்றேன் என கனடாவின் எதிர்க்கட்சித் தலைவர் அன்டெரா ஹொவத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நீதிக்கும், சுதந்திரத்திற்குமாக போராடும் தமிழ் இனத்துடன் என்னை இணைத்துக்கொள்ள விரும்புகின்றேன். மே 18 ஆம் நாள் முள்ளிவாய்க்காவில் பல ஆயிரம் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அப்போது போரை நிறுத்துவதற்காக தமிழ் மக்களுடன் இணைந்து நானும் கனடாவின் வீதிகளில் இறங்கி போராடியிருந்தேன். சிறீலங்காவில் இடம்பெற்ற இனப்படுகொலையில் பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். புதிய சனநாயகக் கட்சி 2016 ஆம் ஆண்டு குயின்ஸ் பார்க்கில் முதலாவது இனப்படுகொலை கூட்டத்தை மேற்கொண்டிருந்தது.

இந்த வருடம் நாம் முள்ளிவாய்க்கால் படுகொலையை உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் தமிழினப் படுகொலை வாரம் தொடர்பான சட்டமூலத்திற்கும் நாளை (16) நாம் ஆதரவுகளை வழங்கவுள்ளோம். மனித உரிமைகளுக்காக போராடும் தமிழ் மக்களுடன் நாம் கைகோர்ப்போம். நீங்கள் எமது உதவிகளை எப்போதும் பெற்றுக்கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## சிறிலங்காவை ஐ.நாவில் பாதுகாத்துவரும் கூட்டமைப்பும் நினைவேந்தலில்



சிறீலங்கா அரசுக்கு கால அவகாசம் வழங்கி ஆட்சியதிகாரத்தினை தக்கவைப் பதற்கு முண்டு கொடுத்துக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை தமது பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குவங்கிகளை நிரப்பிக்கொள்ளத்தக்க பகுதிகளை மையமாக வைத்து ஏற்பாடு செய்திருந்தது.

அதன்பிரகரம், யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழரசுக்கட்சி தலைமை அலுவலகத்தில் மாவை சேனாதிராஜாவின் தலைமையிலும், கிளிநொச்சியில் தமிழரசுக்கிளையின் அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் தலைமையிலும், மன்னார் தமிழரசுக்கட்சி கிளையில் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையிலும், மட்டக்களப்பு ஆரையம்பதியில் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைரெட்ணசிங்கத்தின் தலைமையிலும் நடைபெற்றிருந்து.

இந்த நிகழ்வில் பொதுமக்களின் பங்களிப்பு சொற்ப அளவில் இருந்தாலும் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் ஆகியோர் மட்டுமே பங்கேற்றிருந்தனர். மேலும் நிகழ்வுகள் இடம்பெற்ற தருணத்தில் அண்மித்த பகுதிகளில் குழுமியிருந்த மக்கள் முகத்தைச் சுழித்தவாறு அரசியலுக்காக என்னவெல்லாம் செய்கின்றார்கள் என்று முணுமுணுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தமையையும் தயாகத்தில் உள்ள எமது செய்தியாளர்கள் அவதானித்திருந்தனர்.

# அவலங்கள்; அரங்கேறி பத்தாண்டுகள் "மனம் திறந்த அரசியல் மற்றும் சிவில் சமூகத்தினர்"



## எம்மை அடக்கும் சிங்கள அரச பயங்கரவாதம் ஓயவில்லை

**ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன்**

போர் நிறைவடைந்து பத்து ஆண்டுகளாகின்றபோதும் தமிழினத்தின் மீது அடக்குமுறையைப் பிரயோகித்து அழிக்க வேண்டும் என்ற சிங்கள தேசியவாதிகளின் எண்ணத்தில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை.

முள்ளிவாய்க்காலில் ஒரு இனவழிப்பைச் செய்துவிட்டோம். பாரம்பரிய இனத்தினை கட்டமைப்பு ரீதியாக குலைத்து குருதியை குடித்துவிட்டோம் என்று அவர்களின் மனச்சாட்சி கூட தட்டிக்கேட்காத மனிதாபிமானமற்ற போக்கிலேயே சிங்கள தேசியவாதம் இந்த பத்து ஆண்டுகளிலும் செயற்பட்டு வந்துள்ளது.

எனது மகன் வருவான், எனது துணைவர் வருவார் என்று இன்றும் ஏங்கித்தவிக்கும் உறவுகளும், அவர்களுக்கு உணவெடுத்து வைத்து காத்திருக்கும் ரணம் நிறைந்த சகோதரிகளும் அம்மாக்களும் இன்னமும் இருக்கின்றார்கள். இந்த நெஞ்சங்களுக்கு பதிலளிக்க கூட திராணியற்ற நிலையில் தான் சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள். தமது கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை இன்னமும் தமிழினத்தின் மீது முன்னெடுக்க வேண்டும் என்பதில் எந்தவிதமான மாற்றுக்கருத்திற்கும் இடமின்றி அரசபயங்கரவாதத்தினை தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார்கள்.

சர்வசேதத்தினை ஏமாற்றுவதற்காக வாக்குறுதிகளை வழங்கினாலும் உள்நாட்டில் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இளைத்தவர்கள் அனைவருமே உன்னதமானவர்கள். அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கைகளையுமே எடுக்க மாட்டோம் என்பதில் உறுதியாக இருக்கின்றோம் என்று பகிரங்கமாக கூறி சர்வதேசத்திற்கே சவால் விடுகின்றார்கள். இத்தகையவர்கள் நீதியை வழங்குவார்கள். நியாயமாகச் செயற்படுவார்கள் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும். சர்வதேச சமூகத்திடம் தமிழர்கள் நியாயம் கோரிநின்றார்கள். ஆனால் குற்றங்களை இழைத்த அராசாங்கத்திற்கே சர்வதேச சமூகமும் கால அவகாசங்களை வழங்கி ஆதரவுக்கரம் நீட்டுகின்றது.

தற்போது தீவிரவாத்தின் பெயரால் தமிழர்களின் பிரச்சினையை முழுமையாக குழிதோண்டி புதைத்து சர்வதேச நாடுகளின் அனுதாபங்களையும், மனிதக்குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்த படையினருக்கு உலகத்தீவிரவாதத்தை எதிர்த்தவர்கள் என்ற பட்டமளிப்பைச் செய்து கௌரவத்தினை வழங்கவும் அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் என்பது தமிழர்களின் வரலாற்றின் என்றுமே மறக்க முடியாத ஒரு வரலாற்றுத் துன்பியல் சம்பவம். 70வருடங்களாக இனவிடுதலைக்காக போராட்டத்தில் குமுதினி படுகொலை, கொக்கட்டிச்சோலை படுகொலை, நவாலி படுகொலை எம்மினத்தின் மீதான படுகொலை சம்பவங்களை அடுக்கிக்கொண்டே போக முடியும். இவை தொடர்பில் ஒருவர் கூட விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு நீதிச்சட்டங்கள் முன் நிறுத்தப்பட்டிருக்காத நிலையில் சிறீலங்கா அரசாங்கத்திடமிருந்து நீதி, நியாயத்தினை எதிர்பார்ப்பதே தவறாகும். ஆகவே சர்வதேசம் அரசாங்கத்தினை நம்பி எம்மையும் ஏமாற்றி தாமும் ஏமாந்து போகாது இனம் சார்ந்த விடுதலைக்கு ஆகக்குறைந்தது மனிதாபிமானத்துடனாவது சிந்தித்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

## பத்தாண்டுகளில் இனப்பரம்பலை மாற்றுவது தீவிரமாகியுள்ளது.



**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு குழுவின் இணைத்தலைவர் அருட்தந்தை லியோ அம்ஸ்ரோங்**

முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நாம் பாத்தாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வினை உணர்வு பூர்வமாகவும் அமைதியான முறையிலும் நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவினால் முன்னெடுத்திருந்தோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக இந்த நிகழ்வினை நாம் மிகுந்த அமைதியான முறையில் முன்னெடுக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தோம்.

முள்ளிவாய்க்கால் அவலத்தினை நினைவுகூரும் இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வ தேசத்தில் பலம் வாய்ந்த ஐ.நா.கூட இலங்கை அரசாங்கத்திற்கு பொறுப்புக் கூறுதலுக்காக கால அவகாசம் வழங்கியுள்ளது. ஆகவே இந்த விடயம் சம்பந்தமாக ஐ.நா.அரங்கில் நாம் அதிக பொறுப்புடன் செயற்பட வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளோம். இந்த விடயத்தினை நாம் கடந்த ஐ.நா.தொடரில் பற்கேற்ற பிரதிநிதிகள் ஊடாக அறிந்து கொண்டுள்ளோம். குறிப்பாக எமக்கான பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசாங்கம் பொருட்டாக செயற்படுவதே இல்லை. பௌத்த மயமாக்கலையும், இனப்பரம்பலை மாற்றும் செயற்பாடுகளையும் முன்னெடுத்துக்கொண்டே தனது நிகழ்ச்சி நிரலைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆகவே எமது விடயத்தில் நீதியை நிலைநாட்டவதற்காக சர்வதேச நாடுளின் ஒத்துழைப்புக்களை அரசியல் ரீதியாக பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இராசதந்திர ரீதியாக அணுக வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் முள்ளிவாய்க்கால் முற்றத்திலே தமிழினத்தின் மீது இனப்படுகொலை என்பதையும் இதனை ஏற்றுக் குரல்கொடுக்க கூடிய நாடுகளையும் ஒருங்கிணைத்து எமக்கான ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்யுள்ளது. இதன் ஊடாகத்தான் நாம் சர்வதேச நாடுகளின் ஆதரவினைப்பெற்றுக்கொண்டு எமது மக்களுக்கான நீதியை சர்வதேசத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்று கருதுகின்றோம். மேலும் எமது மக்கள் போரின் இறுதிக்காலத்தில் பட்ட துன்பத்தினை வெளிப்படுத்தும் முகமாகவே இங்கு கஞ்சிக்கொட்டில்கள் அமைத்து அந்த உணவினையும் பரிமாறுவதற்குரிய ஏற்பாடுகளை செய்திருக்கின்றோம்.

## சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நசுக்கப்படுகின்றோம்

**செயற்பாட்டாளர் சந்திரலீலா**




எமது மக்கள் நீதிக்காகவும், உறவுக்காகவும், உரிமைக்காகவும் சனநாயக ரீதியில் போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த போராட்டங்களை இல்லாது ஒழிக்க வேண்டும் என்பதில் தென்னிலங்கை அரசியல்வாதிகளும், வடக்கில் நிலைகொண்டிருக்கும் படையினரும் கங்கணங்கட்டியே வந்திருந்தனர்.

ஆனால் நாம் எமது உரிமைகளை முன்வைத்து வலிந்த போராட்டங்களை தொடர்ச்சியாகவே முன்னெடுத்து வந்திருந்தோம். குறிப்பாக கூறுவதானால், வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் தமது சொந்தங்களுக்கு நடந்தது என்ன என்பதை வெளிப்படுத்தக் கோரி தாயகத்தின் அனைத்துப் பாகத்திலும் வீதியிலிறங்கி தொடர் போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர். கேப்பாபுலவு மக்கள் தமது காணி மீட்புக்காக படைமுகாமின் முன்றலில் தொடர்போராட்டத்தினை முன்னெடுத்தே வருகின்றனர். அதுமட்டுமன்றி படையினரின் திட்டமிட்ட மிரட்டல்கள், போராட்டத்தினை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகள் அனைத்துக்கும் முகங்கொடுத்தே வந்துள்ளனர். எனினும், போராட்டங்களில் பங்கெடுக்கும் எமது உறவுகள் அனைவருமே அத்தனை சவால்களுக்கும் முகங்கொடுத்து நிலைப்பாட்டில் பற்றுறுதியாக இருந்து போராடிக்கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் இந்தபோராட்டங்களை முடக்கும் வகையில் நாட்டில் ஏற்பட்ட தீவிரவாத தாக்குதல்களை தமக்குச் சாதகமாக்க படையினர் முயற்சிக்கின்றனர். கடந்த காலத்தில் எமது இனத்துக்கு எதிராக கொடூரங்கள் அரங்கேறிய முள்ளிவாய்க்கால் மண்ணில் தமது உயிர்களை துறந்தவர்களுக்காக நினைவேந்தலை உணர்வு பூர்வமாக முன்னெடுத்து வந்திருந்தோம். அந்த நிகழ்வினையும் நடைபெறாது செய்வதற்கான நிகழ்ச்சி நிரலை படையினர் முன்னெடுத்து வந்திருந்தனர். எவ்வாறாயினும் எமது சொந்தங்களுக்கான அஞ்சலி நிகழ்வினை என்றும் நாம் கைவிடப்போவதில்லை. அதுமட்டுமன்றி எமது உரிமைகளையும், நீதிக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் சனநாயக போராட்டங்களையும் இறுதிமூச்சு வரையில் நாம் விடுதலைக்காக போராடிக்கொண்டே இருப்போம்.

# திரைமறைவில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு

## தமிழர் மரபுரிமைகள் பேரவையின் இணைத்தலைவர் வி.நவநீதன்



போர் நிறைவடைந்து பத்தாண்டுகள் கடந்து விட்டன. பத்தாண்டுகள் என்ற காலம் தான் கடந்திருக்கின்றனவே தவிர தமிழ் மக்கள் வாழ்வியலில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்படவில்லை.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தமது உறவுகளைத் தேடிக்கொண்டு இருக்கின்றார்கள். தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள். இனப்பிரச்சினை தீர்வு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. தமிழ் மக்களை முள்ளிவாய்க்கால் வரையில் கொன்றொழிக்கப்பட்ட நிலையில் குற்றவாளிகள் தண்டிக்கப்படவுமில்லை. ஆகக்குறைந்தது குற்றவாளிகள் கைது செய்யப்படக் கூட இல்லை. பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவருக்கு கூட நீதி கிடைக்கவில்லை.

உணவு, கல்வி ஆகியவற்றில் தன்னிறைவு கண்டிருந்த வன்னிப்பிரதேசம் தற்போது வறுமையின் பிடியில் நிற்கின்றது. கல்வி அடைவு மட்டத்தில் கடைநிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. நாட்டில் சனநாயக ஆட்சி மலர்கின்றது, நல்லிணக்கம் ஏற்படுகின்றது என்ற சொல்லாடல்கள் பயன்படுத்தப்பட்டாலும் அவை அனைத்துமே நடைமுறைச்சாத்தியமாகியிருக்கவில்லை. தமிழ் மக்கள் அரசியல் உரிமைகளை பெறுவதிலும் ஏமாற்றப்பட்டு பொருளாதாரத்தினையும் இழந்து நிற்கவேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களின் தலைமைத்துவங்களும், பிரதிநிதித்தவங்களும் அரசாங்கத்துடன் போதுமான அளவில் பேரம்பேசவில்லை. தமிழ் மக்களின் எதிர்ப்பார்ப்புக்கள் நிறைவேறும் என்று கூறி எதிர்பார்ப்புக்கள் வலுக்கப்பெற்ற போதிலும் எவையுமே நடைபெற்றதாக கூறமுடியாதுள்ளது. வெறுமனே பத்து ஆண்டுகள் காலம் கடத்தப்பட்டுள்ளது. அக்காலத்தில் கூட தமிழர்களின் தாயகத்தில் இனரீதியான கட்டமைப்பினை மாற்றும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையே திரைமறைவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனை உடன் தடுத்து நிறுத்தாது விடும் பட்சத்தில் தமிழர் இருப்பு தாயகத்தில் கேள்விக்குறியாகிவிடும்.

# அரசை பொறுப்புக்கூறச் செய்வதற்கான பொறிமுறை அவசியம்

## தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் வசந்தராஜா



தமிழ் மக்கள் இலட்சக்கணக்கில் கொன்றொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் பேரவலம் நிறைந்து பத்துவருடங்களாகியுள்ளன. சர்வதேச மனித உரிமை, மனிதாபிமானச் சட்டங்கள் முற்று முழுதாக மீறப்பட்டு நடைபெற்ற ஒரு இன அழிப்பாக இருக்கின்றது.

இந்த அவலத்திற்காக தமிழ் மக்கள் நீதிகோரி போராடிக்கொண்டிருக்கின்றார்கள். சர்வதேசம் நீதிபெற்றுத்தரும் என்று அதீத நம்பிக்கையையும் கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறிருக்கையில் மீறப்பட்ட சட்டங்களுக்கான பொறுப்புக்கூறலை இலங்கை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று ஐ.நா.அரங்கில் 30.1, 34.1 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அரசாங்கம் அந்த தீர்மானங்களின் பிரகாரம் செயற்படுவதாக இல்லை. அரசாங்கம் நீதியை வழங்குவதையோ அல்லது பொறுப்புக்கூறலைச் செய்வதையோ உள்நாட்டில் ஏற்றுக்கொள்வதாக இல்லை. சர்வதேசத்தின் முன்னிலையில் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதாக அரசாங்கம் கூறினாலும் உள்நாட்டில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு எள்ளளவும் தயாராக இல்லை என்பதை அரசு பகிரங்கமாகவே கூறுகின்றது.

உலகமே தீர்மானம் நிறைவேற்றி நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிகளை எடுத்தாலும் அதனை அரசாங்கம் எதிர்த்து நிற்கையில் தமிழர்கள் தமது நீதியைப் பெறுவதற்கு அடுத்த கட்டமாக உள்ள விடயம் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றினை நாடுதல் அல்லது சர்வதேச விசாரணை தீர்ப்பாயம் ஒன்றை அமைத்தல் என்பது பற்றி கூறப்படுகின்றது. எனினும் அதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பிலும் பல கருத்துக்கள் உள்ளன. ஆகவே சர்வதேசமும், பாதிக்கப்பட்ட தமிழ் தரப்பும் நீதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதற்கான பொறிமுறை ஒன்றை கண்டறிய வேண்டும்.

இந்த விடயத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவங்கள் வெவ்வேறுபட்டு பிரிந்து நிற்காது அனைவரும் கூட்டிணைந்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய கால கட்டத்தில் இருக்கின்றோம் என்பது தான் தமிழ் மக்களினதும் நெகிழ்வான கோரிக்கையாக உள்ளது.

அதுமட்டுமன்றி எமது மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கின்றார்கள். அவற்றை மலினப்படுத்தி கைவிடச்செய்வதற்கு பல முஸ்தீபுகள் நடைபெறுகின்றன. எத்தகைய தடைகள் வந்தாலும் போராட்டங்களை நாம் கைவிட முடியாது. கைவிடவும் கூடாது.

70 ஆண்டு காலமாக எமது விடுதலைக்காக போராடுகின்றோம். இடையில் விடுபவர்கள் வெற்றிபெறுவதில்லை. வெற்றிபெறுவர்கள் இடையில் விடுவதில்லை என்ற பழமொழி உண்டு. அதற்கு அமைவாக எமது இலக்கை அடையும் வரையில் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

# இனவழிப்பை சந்தித்த நாம் பூச்சியத்திலேயே உள்ளோம்

## யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தலைவர் இராஜரட்ணம் கிரிசாந்தன்



தாயகத்தில் தமிழினம் பன்னெடுங்கால வரலாற்றைக் கொண்டது. அந்த இனத்தின் மீது போர் என்ற போர்வையில் திட்டமிட்ட இன அழிப்பு அரங்கேற்றப்பட்டுள்ளது. இந்த இன அழிப்பின் கொடூரங்கள், வடுக்கள் இன்றும் சமூகத்திலிருக்கின்றன. நாம் அவலத்தின் பின்னர் எதனையும் சாதிக்கவில்லை. நீதியைப் பெறுவதிலிருந்து அனைத்திலும் கேள்விக்குறியாகிய நிலையில் தான் இருக்கின்றோம்.

ஆகவே முள்ளிவாய்க்கால் பேரவலம் என்பது வெறுமனே உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. எமது இனத்தின் விடுதலைக்கான பயணத்துடன் தொடர்பு பட்டதொன்றாகும். இரண்டாம் உலகப் போரில் சொல்லொணா அவலங்களுக்கு முகங்கொடுத்து இனவழிப்புக்குள்ளான யூத இனம் தனது இனவிடுதலைக்கான பயணத்தில் தன்னுடைய அவலங்களை, அனுபவங்களை சந்ததி சந்ததியாக கடத்தி வந்தது.

ஆகவே பரம்பரியத்தினைக் கொண்ட நாமும் எமது சந்ததிக்கு விடுதலை வேட்கையை உணரச் செய்யவேண்டியது தலையாக கடமையாகின்றது. ஆகவே இனவழிப்புக்கு முகங்கொடுத்து விட்டோம் என்றோ நீதி கிடைக்கவில்லை என்றோ நொந்துபோகாது எமது இலக்கை எமது சந்ததிக்கு உணர்த்தும் வகையில் ஆவணங்களை, காட்சிப்படுத்தல்களை, அனுபவப்பகிர்வுகளை முறையாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

எமது விடுதலைப்போராட்டம் ஆரம்பித்த காலம் முதல் நாம் முகங்கொடுத்த அனைத்தையும் எமது அடுத்த சந்ததிக்கு உணரவைக்கும் முகமான கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டும்.

கடந்த பத்தாண்டுகளில் நாம் எதனையும் செய்யவில்லை. கிடைத்த வாய்ப்புக்களையும் தமிழ்த் தலைமைகள் சரியாக பயன்படுத்தியிருக்கவில்லை.

ஆகவே பத்தாண்டுகளாகின்ற இந்த நினைவேந்தலிலாவது, எமது இனவிடுதலைக்கான வேட்கையை அடுத்த சந்ததிக்கு பாய்ச்சும் அறிவுசார்ந்த நடவடிக்கையை முறையாக முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அனைவரும் திடசங்கல்பம் கொள்ளவேண்டும்.

# வீதியோரத்தில் கூட போராட முடியாத அவலம்

## வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் கிளிநொச்சி இணைப்பாளர் கனகரஞ்சனி



எமது உரிமைகளை வழங்குமாறு கோரி நின்ற எம்மீது தொடுக்கப்பட்ட போர் எங்களின் உறவுகளையும், உடமைகளையும், இல்லாதொழித்தது. இதனை விட போரின் ஈற்றில் எமது உறவுகளை நாம் எமது கைகளாலேயே ஒப்படைத்தோம். சரணடைவதை நேரில் கண்டோம். அனைத்துக்கும் சாட்சிகள் உள்ளன. ஆனால் இன்று வரையில் அந்த உறவுகளுக்கு என்ன நிகழ்ந்தது என்பதை எம்மால் அறிய முடியாதுள்ளது.

நாம் தேடாத இடங்கள் இல்லை. பார்க்காத நபர்கள் இல்லை. ஆனால் எம்மை அவ்வப்போது சமாதானப்படுத்தும் கதைகள் கூறப்பட்டதோடு ஆணைக்குழுக்களும் நிறுவப்பட்டு கால இழுத்தடிப்புத்தான் செய்யப்பட்டது. தற்போது வரையில் எமது உறவுகளை காணாது கண்ணீருடன் காத்திருக்கின்றோம்.

எமது வாக்குகளைப் பெற்று எமக்கு தீர்வளிப்பதாக கூறிய தலைமைகளும் ஜெனீவாவிற்குச் சென்று எமக்கான நீதியை பெற்றுத்தருவார்கள் என்று நாம் எதிர்பார்த்திருக்க எமது அனுமதியைப் பெறாது அரசாங்கத்திற்கு சாதகமாக தலை அசைத்துவிட்டு வந்துவிட்டார்கள்.

தலைமைகளை நம்பி ஏமாந்து விட்டோம். எமக்கான கோரிக்கைகளை நிறைவு செய்வதற்கு நாமே போராட்டங்களை தொடராக முன்னெடுத்தோம். ஆனால் நாட்டின் நிலைமை அதனையும் முடக்கும் சிந்தனையாளர்களுக்கு வெற்றியை தேடிக்கொடுப்பதாகவே இருக்கின்றது. வீதியில் கூட நாம் போராட முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டு விட்டோம். முள்ளிவாய்க்காலில் எமது சொந்தங்களை கொடுத்து பத்தாண்டுகளாகிவிட்டது. ஆனால் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத்தான் கூறுமாறு கோருகின்றோம். இதனை சர்வதேசம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். எமது நியாயமான கோரிக்கைக்கு தலைசாய்க்க வேண்டும். சர்வதேசம் இனியாவது எமக்கான நியாயத்தினை நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்

# அச்சுறுத்தல்களுக்கு அடிபணியப் போவதில்லை

## கிழக்கு பல்கலைக்கழக கலைகலாசாரபீட மாணவர் ஒன்றிய தலைவர் த.புவனராஜ்



எமது சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதிகோரியும், எமது இனத்தின் விடுதலையை வலியுறுத்தியும் நடைபெறும் சனநாயக போராட்டங்களில் பல்கலைக்கழக மாணவர்களாக நாம் பங்கெடுத்து வந்தோம். தற்போதும் கூட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் எமது வாழ்வுக்காக தம்மை அர்ப்பணித்தவர்களுக்கு உயர்வு ரீதியாக அஞ்சலி செலுத்தியுள்ளோம்.

ஆனால் எமது நியாயமான அபிலாசைகளை வழங்கி விடக்கூடாது என்ற பெரும்பான்மை இனத்தின் சிந்தனையில் எள்ளளவும் மாற்றமில்லை. குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் தமது சமூகம் சார்ந்து சிந்தித்து செயற்படுவதற்கு கடிவாளம் கட்ட வேண்டும் என்பதில் பெரும்பான்மை தரப்புக்கள் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகின்றன.

ஆகக்குறைந்தது உயிர்நீத்தவர்களுக்காக சுதந்திரமாக அஞ்சலி செய்வதைக்கூட தடுத்து விட வேண்டும் என்றே கோணத்திலேயே பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக ஒளிப்படம் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலைப்பயன்படுத்தி பாதுகாப்பு என்ற பெயரில் படைத்தரப்பு பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்திருக்கின்றது. போர் நிறைவடைந்து ஒரு தசாப்தத்தினை நாம் பூர்த்தி செய்திருக்கின்ற போதும் அதன் வடுக்களை ஆற்றுவதற்கு சிறீலங்கா அரசாங்கமோ பெரும்பான்மை தேசிய வாதிகளோ தயாராக இல்லை.

மேலும் மேலும் தமிழினத்தை ஒட்டுமொத்தமாக நசுக்கி விட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் செயற்பாடுகளை முன்னெடுகின்றார்கள். இந்த நிகழ்ச்சி நிரல் நிச்சயம் தோற்கடிக்கப்பட வேண்டும். எமது விடுதலைக்கான பயணத்தில் நாம் உறுதியாக இருக்க வேண்டும் என்று இப்புனித நாளில் திடசங்கல்பம் பூண வேண்டும். பத்தாண்டுகள் அல்ல எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் எமது ரணங்களுக்கு உரியவர்கள் பதில் கூறியே ஆகவேண்டும்.

# முள்ளிவாய்க்கால்

## கவிஞர் மாரீசன் - கனடா

முள்ளிவாய்க்கால் என்று சொன்னால் தமிழர்களின் உதிரம் சிந்தும்
தமிழினத்தின் ஆன்மாவைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கி
நந்திக்கடலில் கரைத்த தினம் மே மாதம் பதினெட்டு
தமிழர்களின் இதயங்கள் குமுறி வெடித்த தினம்
பார்த்தவிடமெல்லாம் பதறவைக்கும் சடலங்கள்
குருத்துக்கள் காய்பிஞ்சு பழங்கள் சிதைந்த தினம்
குண்டுகளால் சிதறுண்ட அங்கங்கள் மரங்களிலே
மூச்சற்றுக் குருதியிலே தோய்ந்துறைந்த உறவுகளின்,
கோலங்கள் தமிழினத்தைக் குற்றுயிராய்ச் சாய்த்த தினம்

பலியான தாயகத்து உறவுகளின் குருதியினால்
சேறாகிச் சிவந்த முள்ளி வாய்க்காலின் முற்றத்திலே
பறிகொடுத்த இரத்தங்கள் துடிதுடித்துக் கதறியழும்
பாசத்தின் இறுக்கத்தின் பேரொலியால் நிலமதிரும்

போரோய்ந்து ஆண்டுபத்து நிறைவுற்ற போதினிலும்
பொங்கியெழும் உள்ளத்துக் குமுறல்கள் வெடிக்கும் தினம்

உரிமைக்குப் போராடி இனம்காத்து மண்மீட்ட
மறவர்களை ஒன்றாகப் பலிகொடுத்துத் தவித்த தினம்

தமிழீழம் கைக்கெடுத்த தலைவனுடன் இணைந்து நின்று
தன்னாட்சிப் பணியினிலே சீர்சிறப்பாய்ச் சேவையாற்றி
சரணடைந்த அரசியலார் வாகனத்தி லேற்றப்பட்டுக்
காணாமல் போனவர்கள் உறவுகளின் உள்ளக்குமுறல்
முள்ளிவாய்க்கால் முற்றத்தை அதிரவைக்கும் கொடூரதினம்

முள்ளிவாய்க்கால் கொலைக்களத்தில் உறவுகளைப் பலிகொடுத்து
கையறுந்த நிலையினிலே கதறியழும் அபலைகளைக்
கைகொடுத்து நிமிர்த்திவைக்கத் துணிந்தெழுவோர் எவருமில்லை
புலம்பெயர்ந்த உறவுகளே தாங்கிநின்று தேற்றுகின்றார்

வன்னியிலே வாழ்ந்த எங்கள் நாலரை இலட்சம் உறவுகளும்
மந்தைகளாய் ஒதுக்கித்தள்ளிப் பாதுகாப்புப் பட்டியிலே
குண்டுகளால் கொன்றொழித்த ஆட்சியாளர் இணைந்தெழுந்து
வெற்றிவிழாக் கொண்டாடுகையில் தமிழினமே பொங்கியெழேன்
தன்னாட்சி உரிமைக்காய் கரமிணைத்துப் போராடேன்

மிஞ்சியவர் மூன்று இலட்சம் முட்கம்பி வேலிக்குள்
அனுபவித்த துன்பங்கள்;;, துயரங்கள் கொஞ்சமல்ல
வெய்யினிலே காய்ந்துறைந்து மழையினிலே தோய்ந்துறைந்து
பகலிரவாய் விழித்திருந்து காலுழைய நீள்நிரையில்
நீரெடுக்கப்பட்ட துன்பம் எழுத்தினிலே வடிக்கலாமோ

தமிழரெம்மைச் சுதந்திரமாய் வாழவைக்கப் போராடி
உயிர்ந்த தியாகிகளின் யாகத்தின் கனவுகளை
நெஞ்சத்திற் சுமந்துகொண்டு துடிப்புடனே எழுந்திடுவோம்
சாத்வீகப் போராட்டம் முன்னெடுக்கத் திரண்டிடுவோம்
தன்னாட்சி உரிமையினை மீட்டெடுக்கத் துணிந்தெழுவோம்

# அவலங்கள்; அரங்கேறி பத்தாண்டுகள்
## "மனம் திறந்த புலம்பெயர் அரசியல் மற்றும் சிவில் சமூகத்தினர்"

## முளைக்கும் வரை விதைப்போம்.


பொருளாதார ஆய்வாளர் க.பாலகிருஷ்ணன்

இலங்கை சுதந்திரமடைந்ததை தொடர்ந்து இனரீதியான ஒடுக்குமுறைகளும் தமிழீழ படுகொலைகளும் கடந்த 60 வருடங்களாக தொடர்ந்த வண்ணமுள்ளது. 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தை அடுத்து தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்தன. 58 இனகலவரம் என அழைக்கப்பட்ட அந்த மே 22-27 திகதிவரை சிங்கள காடையர்களினால் மேற்கொள்ளப்பட்ட தமிழன அழிப்பு நடவடிக்கையில் 1500 தமிழர்கள் வெட்டியும் சுட்டும் தாரூற்றியும் உயிருடன் எரித்தும் பல பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டும் கொல்லப்பட்டனர்.

அதன் பின்னர் தொடராக நூற்றுக்கணக்கான படுகொலைகள் அரங்கேற்றப்பட்டு அது முள்ளிவாய்க்காலில் உச்சங் கொண்டு சிங்கள அரச படைகளால் 2009 மே 18ஐ அண்மிய நாட்களில் 146000ற்கு மேற்பட்ட எமது உறவுகள் கொத்துக் கொத்தாக படுகொலை செய்யப்பட்டார்கள். இத்தொகை இலங்கையில் உள்ள ஈழத்தமிழர் சனத்தொகையில் அண்ணளவாக 6% ஆகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலை காரணமாக்கி அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டத்தை பயன்படுத்தி 10ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இனப்படு கொலை நினைவேந்தல் நிகழ்வை சிறிய அளவில் நடாத்த மறைமுக அனுமதி வழங்கப்படும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மகிந்த அணிக்கு கிடைத்த வெற்றி. இதனை தொடர்ந்து அதனை கையாளுபவர்கள், மைத்திரி நாட்டிற்கு பொருத்தமற்ற தலைவன் எனவே அவர் மீண்டும் சனாதிபதிக்கு போட்டியிட தகுதியற்றவர் அத்துடன் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே கட்சியினால் இனி சிங்கள மக்களை பாதுகாக்க முடியாது. மகிந்த அல்லது அவர் சார்ந்த தலைமையினால் தான் நாட்டையும் பௌத்த சிங்கள பேரினவாதத்தையும் பாதுகாக்க முடியும். என்று சிங்கள மக்கள் முழுமையாக ஏற்கும் வரைக்கும் இலங்கையில் கலவரங்கள் தொடரும். கொன்றவனிடம் இருந்து நீதியை பெறமுடியாது. சர்வதேச நீதிவிசாரணை ஊடாகத்தான் தமிழனப் படுகொலைக்கான நீதியை பெற்றுக்கொள்ள முடியும். எனவே கடந்த பத்து ஆண்டுகளாக நீதி கோரும் அரசியலாக தமிழர் அரசியல் மாற்றம் பெற்றது. ஆனால் மே 18 -இற்கு பின் 11 ஆவது ஆண்டில் காலடி வைக்கப்போகிறோம். எமது பெறு பேறு என்னவெனில் இனப்படுகொலை இன்னமும் தொடர்ந்த வண்ணமுள்ளது. இவ்வின அழிப்பு தொடர்பாக இதுவரை எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவுமில்லை போர்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வுமில்லை. 2015ம் ஆண்டு தமிழ்தேசிய கூட்டமைப்பு இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து நல்லாட்சி என்ற அரசை நிறுவினார்கள். ஐக்கிய நாட்டு சபையில் சர்வதேச நீதி விசாரணைக்கான சந்தர்ப்பம் இருந்த போதும் இலங்கை சிங்கள பௌத்த பேரினவாத அரசை சர்வதேச நீதி விசாரணையில் இருந்து பாதுகாப்பதற்காக கலப்பு விசாரணையுடன் கூடிய உள்ளக விசாரணைக்கு கொண்டு வந்தார்கள். காலத்தை கொடுத்து சாட்சியங்களை அழிக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு துணைபோவது தமிழன அழிப்பின் மற்றொரு வடிவமாகும். எனவே த.தே. கூட்டமைப்பை நம்பி பலனில்லை என்ற அடிப்படையில் ஈழத்தமிழ் மக்கள் தாமே போராடி தமது உரிமையை கேட்க தள்ளப்பட்டதன் விளைவே காணி மீட்புக்கான போராட்டம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே என கோரி கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நடக்கும் போராட்டமும் ஆகும்.

## மருத்துவமனைகளில் உடலங்கள் குவியலாகக் கிடந்தன!

### வைத்திய கலாநிதி திருமதி இளம்பிறை



முள்ளிவாய்க்கால் இறுதிவரை உயிர்காக்கும் பணியில் இருந்த பெண் போராளி மருத்துவர் வைத்திய கலாநிதி திருமதி இளம்பிறை

80,000 மக்கள் மட்டுமே வன்னிப் போர் வலயத்துள் அகப்பட்டுள்ளதாகவும் எந்த வித இழப்புக்களுமின்றி மக்கள் மீட்கப்பட்டு வருகிறார்கள் என்றும் இலங்கை அரசின் ஊடக அமைச்சர் கூறிக்கொண்டிருந்தார். 2,50,000 மக்கள் போர் தவிர்ப்பு வலயத்தில் இருந்தபடி இச்செய்தியை கேட்டுக் கொண்டிருந்தனர். மீண்டும் மீண்டும் தாக்கப்பட்ட மருத்துவமனைகளில் அகற்றப்பட முடியாதபடி உடலங்கள் குவியலாகக் கிடந்தன. மருத்துவ ஆளணியில் தப்பியவர்கள் காயமுற்றவர்களைத் தமது வல்லமைகளுக்கு மேலாக தமது காயங்களோடு உயிர்காப்பதில் ஈடுபட்டார்கள். இலங்கைப் படைகளின் துப்பாக்கிகள் அனைத்தும் நெரிசலாக இருந்த மக்கள் திரளுக்குள் இடைவெளியின்றி இலட்சக்கணக்கில் ரவைகளை சுட்டுத்தள்ளின.

தாம் செத்து விழப்போகும் கணங்களை எதிர்கொண்டு மக்கள் முடிந்த வரை தரையைத் தோண்டியும் சேலைகளுக்குள் மண்ணை நிரப்பியும் தற்காத்துக்கொள்ள முயன்றார்கள்.விமானங்களும் எறிகணைகளும் தங்கள் பங்கிற்கு வெடி குண்டுகளை அடுத்தடுத்து ஏவின. அழுகுரல் களும் வெடியதிர்வுகளும் கரும்புகையும் பிண வாடையும் கலந்த நிலையில் போர் ஓய்ந்தது. இராணுவத்தின் கட்டுப்பாட்டு முள்வேலிகளுக்குள் சென்று சேர உப்புக்கஞ்சி கூட கிடைக்காத நிலையில் மக்கள் பட்டினியை சில நாள் எதிர்நோக்கினர். குடிநீருக்காக நீண்ட வரிசையில் காத்துக் கிடந்தனர். பின்னர் மருத்துவர்களின் குழந்தைகள் உட்பட அனைவரும் பட்டி போல் அடைக்கப்பட்ட வதை முகாமுக்குள் நோயாளிகளானார்கள். அனேக இறப்புக்கள் அங்கேயே நடந்தேறின. அடிப்படை சுகாதார வசதிகளை இல்லாமல் ஆக்கி அருவியில் நீர்த்தேவைகளை நிவர்த்தி செய்யும் நிலையில் அனைவரும் இருந்தோம். ஐ.நா.வின் அதிகாரி பான் கீ மூன் இந்த சூழ்நிலையை பார்வையிட்டு இலங்கை அரசைப் பாராட்டினார். இராணுவத்திடம் ஒப்படைத்த தம் பிள்ளைகளைத் தேடி தாய்தந்தையர் இன்னும் போராடுகிறார்கள். உலக வல்லாதிக்க மக்கள் அனுகூலங்களைத்தேடி மானுட வேதனைகளை உதாசீனம் செய்தபடி அமைதி காக்கிறார்கள். நீதி நியதியிடம் தோற்றுக் கிடக்கிறது.

## தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பிற்கு இலங்கை அரசு நிச்சயம் பதில் சொல்லியாகத்தான் வேண்டும்.

**பிரியந்தி சுதர்சன் (ஊடகவியலாளர்) நாடாளுமன்ற உறுப்பினர் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்**



முள்ளிவாய்க்கால் ஒவ்வொரு உணர்வுள்ள தமிழரின் வாழ்க்கையிலும் மறக்கவும் மறைக்கவும் முடியாத துயர நாள். நாம் இழந்துபோன எம் ஒவ்வொரு உடன்பிறப்புகளும், சர்வதேச சமூகத்தில் கேள்விக் குறியாக விளிம்பின் ஓரத்தில் நின்ற ஒவ்வொரு தமிழனின் வாழ்க்கைக்கும் விடைகாணக் கூடிய வகையில் எம்மை உட்பிரவேசிக்க வைத்துள்ளது.

இலங்கைப்போரின் உச்சக்கட்டத்தில் மக்கள் அனைவரும் முள்ளிவாய்க்காலில் குவிக்கப்பட்டனர். இந்த இடத்தில் இலங்கை ராணுவம் பயன்படுத்திய வெடி குண்டுகள் பற்றிய தகவல்கள் அனைவரையும் அதிரவைக்கின்றன. இலங்கை அரசாங்கம் இனப்போரை தங்களுக்குச் சாதகமாக நடத்தி அப்பாவி தமிழர்களையும், தமிழ்மக்களையும் கொன்றொழித்தனர்.

தன்நாட்டு தமிழ்க்குடி மக்களையே கொன்று குவிக்க சர்வதேச நாடுகள் ஆயுத உதவியை இலங்கைக்குச் செய்தது. இப்போருக்கு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனஅழிப்பிற்கு இலங்கை அரசு நிச்சயம் பதில் சொல்லியாகத்தான் வேண்டும். கயவன் ராஜபக்சவை தூக்கில் ஏற்றப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை. சர்வதேச அளவில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான பல்வேறு அமைப்புகள் பல்வேறு போராட்டங்களை செய்து வருகின்றன. குறிப்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இலங்கையை குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தும் முகமாக பல்வேறு செயற்பாடுகளை செய்து வருகிறது. வஞ்சத்தால் வெற்றி கொண்டவர்கள் என்றும் சரித்திரத்தில் நிலையாக நின்றதில்லை. சூது வெல்லும். ஆனால் தர்மம் மறுபடியும் ஒருநாள் நின்று கொல்லும் என்று சொல்வார்கள். தற்காலிகமாக இலங்கை அரசாங்கம் வெற்றி பெற்று விட்டதாக நினைத்துள்ளார்கள், ஆனால் கண்டிப்பாக வருங்காலத்தில் தமிழ் மக்கள் தன்னாட்சி பெற்று சுய அதிகாரத்துடன் தனித்தமிழீழத்தை மீட்டெடுப்பார்கள் என்பதில் துளியளவும் ஐயமில்லை, இதற்கு நாம் செய்யவேண்டியது யாதெனில் போரில் பாதிக்கப்பட்ட நம் தமிழ் உடன்பிறப்புகளுக்கும் போதிய உதவிகளைச்செய்வது, உலகளாவிய அமைப்புகளுக்கு இலங்கையில் என்ன நடந்தது என்று தெரியப்படுத்தி உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்கான சனநாயக முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

# முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பு நினைவு நிலையங்களை அமைப்போம்! - நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன்



தமிழீழதேசம் முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் நினைவுகளைத் தன்னுள் இருத்தி, சிங்கள அரசின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் என்பது காலத்தின் நியதி என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் மே-18 தமிழீழத் தேசிய துக்க நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தமிழீழதேசம் முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் நினைவுகளைத் தன்னுள் இருத்தி, சிங்கள அரசின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் என்பது காலத்தின் நியதி என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் மே-18 தமிழீழத் தேசிய துக்க நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பு நினைவு நிலையங்களை உலகெங்கும் அமைப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்களது அறிக்கையின் முழுவிபரம் :

இன்று தமிழீழத் தேசிய துக்க நாள். சிறீலங்கா அரசின் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் நினைவு நாள்.

நாகரீக உலகம் வெட்கித் தலைகுனியும் வகையில் தமிழ் மக்கள் மீது சிங்கள அரச படைகள் நிகழ்த்திய கொடுமைகளை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் நினைவுகூரும் நாள். சிங்கள அரசின் முள்ளிவாய்க்கால் தமிழன அழிப்புத் தற்செயலாக நிகழ்ந்ததொரு நிகழ்வல்ல. எதிர்ப்பாராமல் நிகழ்ந்ததொன்றுமல்ல. அது சிறீலங்கா இராணுவத்தின் அத்துமீறலின் விளைவும் அல்ல. மாறாக இது தமிழ் மக்களின் சுதந்திர வேட்கையினைக் கருவறுக்க சிறீலங்கா அரசு திட்டமிட்டுப் புரிந்தவொரு வெறியாட்டமே முள்ளிவாய்க்கால் இனவழிப்பு.

தமிழினவழிப்பின் ஊடாக சிங்கள அரசு அடைந்து கொள்ள முயன்ற விடயங்களை அடைந்து கொள்ள முடிந்ததா என்பதனையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பு மூலம் தமிழ் மக்களின் சுதந்திர வேட்கையினை நசுக்கி விட சிறீலங்கா அரசு முயன்றது. சிறீலங்கா அரசின் கொள்கையான 'ஒரு நாடு ஒரு மக்கள்' என்ற நிலைப்பாட்டை நடைமுறையில் அமுல்ப்படுத்தலாம் என்று எண்ணியது. சிங்கள அரசின் நிலைப்பாடுகளையும் விருப்பங்களையும் இயல்பாக ஏற்று அதற்கு அடிபணிந்து தமிழ் மக்கள் வாழும் நிலையை ஏற்படுத்த முடியும் என்று எண்ணியது. இவ்வாறான நிலையை உருவாக்குவதன் மூலம் தமிழ் மக்களை நிரந்தரமாகத் தோற்கடித்து விடலாம் என்று சிந்தித்தது. தமிழீழம் என்ற தனியரசு எண்ணக்கருவை அழித்துச் சிதைத்து விடலாம் என்று எண்ணியது.

ஆனால் பத்தாண்டுகள் கழிந்தும் தான் விரும்பியவற்றை சிறீலங்கா அரசால் அடைந்து கொள்ள முடியவில்லை. தமிழ் மக்களைத் தோற்கடிக்கப்பட்ட மக்களாக மாற்ற முடியவில்லை. தமிழ் மக்களின் சுதந்தர உணர்வை சிறீலங்கா அரசால் நசுக்கி விட முடியவில்லை. தமிழ் மக்கள் தமது உரிமைக்காக தாயகத்திலும் அனைத்துலகிலும் குரல் கொடுப்பதைத் தடுத்து விட முடியவில்லை.

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புக்கு நீதி கோரும் போராட்டத்தை தமிழ் மக்கள் ஏற்கனவே இருக்கும் அனைத்துலக அரங்குகளில் கடந்த 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். அவ்வரங்குகள் பலவற்றில் முடிவுகளை எடுக்கும் அதிகாரங்கள் நாடுகளின் வசமே இருப்பதால், அரசற்ற தமிழ்மக்கள் அங்கு நீதியினைப் பெறுவது இலகுவானதொரு விடயமாக இருக்கப்போவதில்லை என்பது புரிகின்றது. எனவே நீதிக்கான எமது போராட்டத்திற்காக புதிய போர்க்களங்களை உருவாக்குவது அத்தியாவசியமானதாகும்.

முள்ளிவாய்க்கால் தமிழனவழிப்பின் நெருப்பு அணையாது தலைமுறை தலைமுறையாகப் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். இனவழிப்பு நினைவுகளைச் சுமந்திருக்கும் மக்களே தமது விடுதலையையும் அவாவி நிற்பார்கள். இதனால் முள்ளிவாய்க்கால் நினைவுகளுடன் அறிவுத்தளத்தில் செயற்படக்கூடிய முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பு நினைவு நிலையங்களை பல்வேறு நாடுகளிலும் அமைக்கும் திட்டத்தை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பில் கொல்லப்பட்ட அனைவருக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தலைதாழ்த்தி வணக்கம் செலுத்துகிறது. தமிழீழதேசம் என்றும் இந்நினைவுகளைத் தன்னுள் இருத்தி சிங்கள அரசின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் என்பது காலத்தின் நியதி என பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் தனது தமிழீழத் தேசிய துக்க நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# அன்று ஒரு அமைப்பு, ஒரு இலக்கு இன்று எண்ணற்ற அமைப்புக்கள் ஆனால் இலக்கு?

**தமிழ்வாணி (பிரித்தானியா)**
**தமிழ் தேசிய செயற்பாட்டாளர்**



அடையாளத்தைத் தொலைத்துவிட்டு அன்னிய நாட்டில் அகதியாக வாழும் லட்சக்கணக்கான இளைய சமுதாயத்தில் ஒருத்தியாக அன்று 2018, எனக்கான அடையாளத்தை தேடிதாய் மண் நோக்கிய என் பயணம் முள்ளிவாய்க்காலில் முடிவடைந்து 10 ஆண்டுகள் ஆகிற்று.

எத்தனை சந்திப்புக்கள், சாட்சியங்கள், ஊடக அறிக்கைகள் மற்றும் ஆவணப்படங்கள் எல்லாம் என் ஏமாற்றச் சின்னங்கள். இனி எந்த பயனும் இல்லை என்று ஏற்றுக் கொண்டு ஒருமனைவியாக தாயாக என் வாழ்க்கையும் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனாலும் மனச்சாட்சி கேட்கும் கேள்விகளுக்கு இன்னும் பதிலைத் தேடிக் கொண்டுதான் இருக்கிறேன்.

அன்று ஒரு தலைவர், ஒரு அமைப்பு, ஒரு இலக்கு. இன்று எண்ணற்ற தலைமையும் அமைப்புக்களும்... ஆனால் இலக்கு???? யாரிடமும் பதில் இல்லை. நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் போராடியவர்களும் அவர்களுக்கு பலமாக நின்றவர்களும் இரக்கமின்றி கொல்லப்பட்ட காட்சிகளும் அவை என் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களும் இங்கு அரசியல் என்னும் பெயரில் அடுத்தவரின் தியாகத்தை விலை பேசிக் கொண்டிருக்கும் வியாபாரிகளுக்கு புரியவாய்ப்பில்லை. அவர்களுக்கு புரியவைக்கும் எண்ணமும் எனக்கில்லை. கொலை செய்தவர்களிடமே அதற்கான நியாயத்தை வேண்டிநிற்கிறோம். வரலாறு எப்படி எங்களை மன்னிக்கும்.

இத்தனை ஆண்டுகள் கடந்தும் கடந்து செல்லமுடியவில்லை கொடுமையான இரத்தம் உறைந்த அந்த நாட்களை. எல்லோரும் ஒருதடவையாவது உங்கள் மனசாட்சியை கேட்டுக் கொள்ளுங்கள், எங்களுக்காக அவர்கள் உயிரைக் கொடுத்தார்கள், அவர்களுக்காக நாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்று.

# நாம் அனைவரும் ஓரணியாக இந்நாளில் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

**எழிலரசி மனோகரன், மருத்துவ உதவியாளர்**
**(பிரித்தானியா) தமிழ் தேசிய செயற்பாட்டாளர்.**



முள்ளிவாய்க்கால் எம் இனத்தின் இதயத்தில் முள் தைத்து வழிந்தோடிய குருதி வாய்க்கால் நிரம்பி வெள்ளமாக கடலில் கலந்த இடம் ஊற்று நீரிலும் குருதிவாடை அந்த நாட்கள் எம்மினத்தின் இருண்ட நாட்கள் கற்பத்தில் இருந்தவர்கள் முதல் கடைசி வயதில் இருந்தவர்கள் வரை கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட இந்த இறுதி நாளை இன்று பத்தாவது வருடமாக நினைவு கூர்ந்து அஞ்சலித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஒரே கொள்கையுடன் ஒரே குறிக்கோள்களுடன் ஒரே இலக்கிற்காக போராடிய இனமான நாங்கள் இன்று இந்த பூமி பந்திலே சிதறிக்கிடக்கின்றோம்.எமது தலைமைகளும் குறிக்கோள்களும் வேலைத்திட்டங்களும் சரியான திசை வழியின்றி சிதறிக்கிடக்கின்றது. நாம் சேர்ந்துவிட கூடாது என்பதில் எதிரி குறியாக இருக்கின்றான். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக நீதி கேட்கிறோம். குற்றமிழைத்தவர்களை குற்றவாளிக்கூண்டில் நிறுத்த படாத பாடுபடுகின்றோம். சிதறிக்கிடக்கும் எம்மினமும், எம் கொள்கைகளும் ஒன்றுசேர பாடுபடுவோம். இதன் மூலமே எமக்கான நீதியும் தீர்வும் சாத்தியமாகும். எனவே தமிழர் நாம் அனைவரும் மீண்டும் ஓரணியாக இந்நாளில் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அனைவரையும் உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

# அவலங்கள்; அரங்கேறி பத்தாண்டுகள்
# "மனம் திறந்த தமிழக அரசியல் மற்றும் சிவில் சமூகத்தினர்"

## சர்வதேச சமூகத்தின் நல்லாதரவை வென்றெடுப்போம்

**தொல். திருமாவளவன் - தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி**



மே-18, ஈழமண்ணில் இனவழிப்புக் கொடூரம் நடந்தேறிய நாள். "யுத்தம் முடிந்தது. விடுதலைப்புலிகள் அழிந்தனர்" என்று இராஜபக்ச தலைமையிலான சிங்கள இனவெறி கும்பல் கொக்கரித்த நாள். பத்தாண்டுகள் உருண்டோடி விட்டன.

ஈழத்தமிழர் வாழ்வில் இன்னும் வெளிச்சக் கீற்று வெளிப்படவில்லை. இனக்கொலை மற்றும் போர்க்குற்றம் இழைத்த இராஜபக்ச கும்பல் இன்னும் விசாரிக்கப்படவும் தண்டிக்கப்படவும் இல்லை. மேலும் எஞ்சியுள்ள தமிழருக்கு மறுவாழ்வளிக்கவும் அவர்களின் வாழ்வாதாரங்களுக்கான மறுகட்டமைப்பைச் செய்யவும் ஆளுங்கும்பல் எந்த முனைப்பையும் பெரிதாக மேற்கொள்ளவில்லை. தமிழர் காணிகள் யாவும் சிங்கள இராணுவத்தினருக்கென ஆக்கிரமிப்புக்குள்ளாகி பெருமளவில் இராணுவமயமாகி வருகிறது. இராணுவக் குடும்பத்தினர் புலப்பெயர்வு என்னும் பெயரில் சிங்கள குடியேற்றம் தீவிரமாகி வருகிறது. அத்துடன், கலாச்சார ரீதியாகவும் தமிழ்மண் 'சிங்கள-பௌத்த' மயமாகி வருகிறது. அதாவது, தமிழினத்தின் கலாச்சாரம் அல்லது பண்பாடு மெல்ல மெல்ல சிதைக்கப்பட்டு வருகிறது. வீதிகளின் பெயர்கள், கடைகள், உணவகங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் போன்றவை சிங்கள அடையாளங்களாக மாறி வருகின்றன. போர்ச்சூழலிலும் அதன்பின்னரும் கடந்த பத்தாண்டுகளில் காணாமல் போன தமிழர்களின் நிலை என்ன என்பது பற்றிய தகவல் ஏதும் இல்லை. சிங்கள இனவெறி ஆட்சியாளர்கள் அது குறித்து கிஞ்சித்தும் அக்கறை காட்டவில்லை.


உலகநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் யாவரும் தமது தாயகம் திரும்புவதற்குரிய நல்லிணக்கமான- நம்பகமான சூழல் இன்னும் அங்கே மலரவில்லை. இந்தியா உள்ளிட்ட அண்டைநாடுகளோ ஐ.நா. பேரவை உள்ளிட்ட சர்வதேச சமூகமோ பாதிக்கப்பட்ட ஈழத்தமிழருக்கு உரிய நீதிகிட்ட ஏதுவாக எந்தவொரு நேர்மறையான நகர்வையும் மேற்கொள்ளவில்லை. மாறாக, சிங்கள இனவெறி ஆட்சியாளர்களுக்குத் துணைபோகும் அவலமே இன்னும் தொடர்கிறது.

இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சி மாறி, பாரதிய ஜனதா ஆட்சிக்கு மலர்ந்தால் தமிழ்ச்சமூகத்துக்கு நலம்பயக்குமென்கிற சிலரின் எதிர்பார்ப்பு தகர்ந்துபோயுள்ளது. ஈழத்தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் ஆண்டாலும் பாஜக ஆண்டாலும் ஒரே நிலைப்பாடு மற்றும் ஒரே அணுகுமுறைதான் என்பது உறுதியாகியுள்ளது. இந்நிலையில், ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகமும் சர்வதேச அரசியல் சூழலுக்கேற்ப ஒருங்கிணைந்து செயல்படவும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் நல்லாதரவை வென்றெடுத்து மண்ணை மீட்கவும் மக்களைக் காக்கவும் இந்நாளில் உறுதியேற்போம்.

வீரச் சாவுகளே விதிகளைத் திருத்தும்! விடுதலைக் களமே விடியலைப் படைக்கும்!

## உறுதிமிக்க தலைமையும் தெளிவான வெளியுறவுக் கொள்கையும் வரலாற்று அன்னையின் கட்டளை!

**இளந்தமிழகம் - செந்தில்**



முள்ளிவாய்க்கால் - தொன்மைமிக்க தமிழினம் தனது ஆயிரக்கணக்கான ஆண்டுகால வரலாற்றில் கண்டிராத அழிவாகும். பச்சிளங் குழந்தைகளும் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்படுவதைத் தடுக்க முடியாத கையறு இனமாகவே பத்துகோடி தமிழர்களும் இருந்தோம். வலிசுமந்த மக்களுக்கு ஓர் ஊழிக் காலமாய் இந்த பத்தாண்டுகள் நகர்ந்துள்ளது.

இன்றைய உடனடி தேவை, விலைபோன தமிழ்த் தலைவர்களைப் புறக்கணித்து வரலாறு அடையாளங் காட்டியுள்ள ஆற்றல்களை ஒன்றிணைத்த ஐக்கிய முன்னணியாகும். இலங்கை தீவில் இருக்கும் சிங்கள தேசத்தால் அநீதியான இன அழிப்புக்கு உலகின் ஆதரவைப் பெற முடிந்தவிடத்து தமிழ்த்தேசத்தால் தனது விடுதலைக்கான ஆதரவை ஏன் பெறமுடியவில்லை? முள்ளிவாய்க்கால் எழுப்பும் முதற்கேள்வி இதுதான். இதற்கு விடை காண்பதிலேயே பண்புரீதியானப் பாய்ச்சல் இருக்கிறது. தமிழ்நாட்டில் ஈழஆதரவு ஆற்றல்களிடையே நிலவும் அரசியல் முரண்பாடுகளில் ஒருபக்கம் நிலையெடுத்து ஈழத்தமிழர்கள் அடிபட்டுவிடக் கூடாது. இந்திய மத்திய அரசில் பதவியில் இருப்போரின் விருப்பத்திற்கிணங்க தமிழீழத் தேசியக் கொள்கையை வடிவமைத்தல் தற்கொலைக்கு ஒப்பானது. தமது விடுதலைக்கு ஆதரவு பெறுவதன் பொருட்டு இந்தியாவில் உள்ள ஆளும்வர்க்கக் கட்சிகள்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம் →

## ஒன்றரை இலட்சம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட போது கையாலாகாதவர்களாக இருந்தோம்



**இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரேயன் (அ.தி.மு.க)**

பத்தாண்டுகள் உருண்டோடி விட்டன. மே 18, 2009 - அவ்வளவு சுலபமாக மறக்க முடியுமா? தமிழ் ஈழ இனப் படுகொலையில் ஒன்றரை லட்சம் ஈழத்தமிழர்கள் கொத்துக் கொத்தாக படுகொலை செய்யப்பட்ட நாள். தமிழக கடலோரத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் நமது தொப்புள் கொடி உறவுகள் அழிக்கப்பட்ட போது எதையும் செய்ய முடியாமல் கையாலாகாதவர்களாக இருந்தோம். 2009 ஜனவரி 24 அன்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் பேசும் போது ஈழத்தமிழர்கள் மீது சிங்கள ராணுவம் நிகழ்த்திய தாக்குதல்களை கண்டித்து உணர்ச்சியோடு உரையாற்றினேன். அன்று இரவு வைகோ அவர்கள் என்னை தொடர்பு கொண்டு மனமாரப் பாராட்டினார். அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் பா. நடேசன் தொடர்பு கொண்டார். " வணக்கம் மைத்ரேயன் ! வன்னியிலிருந்து நான் நடேசன் பேசுகிறேன். தலைவர் பிரபாகரன் சார்பில் எங்கள் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன் ". அந்த பாசமான குரல் இன்றும் என் செவிகளில் ஒலிக்கிறது. 2009 மார்ச் 11 அன்று மூன்றாவது அணியின் சார்பில் கர்நாடகா தும்குரில் திரு தேவகவுடா ஏற்பாட்டில் நடைபெற்ற மாநாட்டில் கழகத்தின் சார்பாக அம்மா அவர்களின் பிரதிநிதியாக நான் கலந்து கொண்டேன். அதே நாளில் சென்னையில் அம்மா அவர்கள் ஈழத்தமிழர் பிரச்சினைக்காக உண்ணாவிரதம் இருந்தார். மதியம் 1மணி அளவில் நடேசன் என்னை தொடர்பு கொண்டு அம்மா அவர்களின் உண்ணாவிரத போராட்டத்திற்கு பிரபாகரன் தனது நன்றியை தெரிவித்ததாக கூறினார். 2009 ஏப்ரல் 26 அன்று இரவு சேலத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் அம்மா அவர்கள் தேர்தலுக்குப் பின் அமையவுள்ள ஆட்சியில் கழகம் பங்கேற்றால் இந்திய ராணுவத்தை அனுப்பி தமிழ் ஈழம் அமைப்பேன் என்று முழக்கமிட்டார். ஜெயா பிளஸ் தொலைக்காட்சி நேரலையில் அதைப்பார்த்து பிரபாகரன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். அருகில் இருந்த நடேசன் என்னை தொடர்பு கொண்டு அதை பகிர்ந்து கொண்டார். அதை நானும் கார்டனில் தெரிவித்து விட்டேன். இவை அனைத்தும் எனது வாழ்க்கையில் மறக்க முடியாத நினைவுகள். அன்பு நண்பர் நடேசன் ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் ஒப்பந்தப்படி சரணடைந்த போது ஈவிரக்கம் இன்றி போர் விதிமுறைகளுக்கு மாறாக சுட்டுக் கொல்லப்பட்டார். 2009 மே மாதம் 14 - 18 நாட்கள்.... மறக்க முடியாத நாட்கள். நினைக்கிறேன் வலிக்கிறது. நெஞ்சமெல்லாம் கொதிக்கிறது.

# உலகத்தில் ஒற்றை தமிழன் உள்ளவரை முள்ளிவாய்க்கால் நினைவுகள் நிலைத்திருக்கும்

## தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல்முருகன்



நெஞ்சமெலாம் பதைபதைக்க, உலகம் முழுதும் வேடிக்கை பார்த்திருக்க, நமது தொப்புள் கொடி உறவுகள் இலட்சக்கணக்கானோர் கொத்துக் கொத்தாய்க் கொன்றழிக்கப்பட்ட கோரம் நிகழ்ந்து இன்றோடு பத்து ஆண்டுகளாகிவிட்டது

இலங்கை சிங்கள பௌத்த பேரினவாத அரசு தமிழர்களை முழுமையாக அழித்தொழித்து ஒட்டுமொத்த இலங்கை தீவையும் சிங்கள மயமாக்குவதற்கு சிங்கள இனவெறி அரசு அரங்கேற்றிய இனப்படுகொலையின் சாட்சியமாக முள்ளிவாய்க்கால் மண் விளங்குகிறது.

சர்வதேச போர் விதிமுறைகளுக்கு இலக்கணமாக தமிழர்களின் அறத்துடன் போர் புரிந்த தமிழீழ விடுதலை புலிகளை சிங்கள பௌத்த பேரினவாத அரசு 25க்கும் மேற்பட்ட நாடுகளின் உதவியோடு நீதிக்கு புறம்பாக முடக்கியதோடு இலட்சக்கணக்கான எமது ஈழத்து உறவுகளை ஈவு இரக்கமின்றி கொன்றுகுவித்த இந்த நாளை உலகத்தில் ஒற்றை தமிழன் உள்ளவரை நினைத்து பார்ப்பான்.

என் தொப்புள்க்கொடி உறவுகள் தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடனான வாழும் உரிமைக்காக எழுபது ஆண்டுகளாக போராடி வருகின்றனர். அவர்களின் சனநாயக போராட்டங்களை முடக்கிய சிங்கள பேரினவாதம் எண்பதுகளில் எனது சகோதர சகோதரிகளை ஆயுதமேந்துவதற்கு உந்தித் தள்ளியது என்பதே உலகறிந்த உண்மை. இன வன்மமும், குரூர மனங்களையும் கொண்ட சிறீலாங்கா படைகள் தமிழனத்தின் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்களை முன்னெடுத்தன. கொடூரங்களை அரங்கேற்றின. இறுதியாக முள்ளிவாய்க்காலிலேயே தமிழனத்தின் மீது ஒரு இனப்படுகொலையை சிறீலங்கா படைகளின் உதவியுடன் அரசாங்கம் நிறைவேற்றியிருந்தது.

இத்துடன் போர் முடிவுக்கு வருவதாக 2009 மே 18ஆம் நாள் அறிவித்து விட்டு தனது மிலேச்சத்தன இனப்படுகொலையை மறைத்து போரில் வெற்றி பெற்றுவிட்டோம், ஆயுத வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டோம் என்று உலகம் முழுவதும் மார்பு தட்டியது.

தமது விடுதலைக்காக இலட்சக்கணக்கானவர்கள் தமது இன்னுயிர்களை தியாகம் செய்துள்ளனர். எங்களின் உறவுகள் குற்றுயிரும், குலையுயிருமாக இருக்கும்போது அவர்களை சிறீலங்கா அரச படைகள் கொன்றொழித்து பத்தாண்டுகளாகின்ற போதும் அதற்கான நீதி நிலைநாட்டப்படவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. எமது சகோதரிகளை விதைவைகள் ஆக்கிய படைகள் சட்டங்கள் முன் நிறுத்தப்படவே இல்லை. இன்னமும் எமது உறவுகள் தாயகத்தில் இராணுவ அச்சுறுத்தலான சூழலில் தான் அன்றாட வாழ்வை கழிக்கின்றார்கள். முகாம் வாழ்க்கை முற்றுப் பெறவில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் கதை கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. சிறைகளில் சகோதரர்கள் வாடிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் சிங்கள பேரினவாதிகள் எமது உறவுகளின் தாயக தேசத்திலே திட்டமிட்டு புத்த விகாரைகளை அமைக்கின்றது. காணிகளை கைப்பற்றி சிங்கள மக்களை குடியேற்றுகிறது. சிறிலாங்கா இராணுவம் எமது உறவுகளின் காணிகளையும், பண்ணைகளையும் வலிந்து பறித்து வைத்திருக்கின்றது.

தாயகம் எங்கும் சிறீலங்கா படைகள் நிலைகொண்டிருக்கின்றன. தமிழினத்திதை நசுக்குவதையே இலக்காக கொண்டு செயற்படுகின்றன. சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனையில் இன்னமும் திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை எந்தெந்த வடிவங்களில் எல்லாம் முன்னெடுக்க முடியுமோ அத்தனை வழிகளிலும் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் பேரவலம் நடைபெற்று பத்தாண்டுகளாகின்றன. அந்த நினைவேந்தல் தினத்தினை வெறுமனே உணர்வுகளுக்குள் மட்டுபடுத்தி நிறுத்திக் கொள்ளாது எமது தொப்புள்கொடி உறவுகள் சுயநிர்ணய உரிமைகளைப் பெற்று தாயகத்தின் தனது தேசிய அடையாளங்களுடன் வாழுவதற்கான இலக்கை அடைய உறுதியான நடவடிக்கைகளை தாயகத்திலும், தமிழகத்திலும் எடுக்க வேண்டும் என்று இந்நாளில் உறுதியெடுப்போமாக.

12 ஆம் பக்க தொடர்ச்சி →

## உறுதிமிக்க தலைமையும்

தொடங்கி விடுதலை இயக்கங்கள் வரை எவரையும் நாடுவது ஈழத்தின் தேவை. ஏதாவதொரு கட்சியுடன் நெருங்கிப் போவது அடிபடுவதில் போய்முடியும். இந்தியாவைப் பொருத்தவரை அரசுடன் உறவு என்பதே ஈழத்தின் வெளியுறவு கொள்கையாக அமைய முடியும். இந்திய அரசு தனது நலனில் இருந்து இலங்கைத் தீவின் அத்தனை முரண்பாடுகளையும் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு விதமாய் கையாண்டுள்ளது. கடிவாளமிட்ட குதிரைப் போலன்றி தனது நலனில் இருந்து ஈழத் தமிழர்களும் இந்திய அரசைக் கையாள்வதில் பெறவேண்டிய தேர்ச்சியிலேயே வெற்றி தங்கியிருக்கிறது. சொல்லிமாளாத துயரக்கடலில் நிற்கும் ஈழத்தமிழர்களை வரலாற்றன்னை அரவணைப்பாள் என்ற நம்பிக்கையோடு முன்னேறுவோம் .

# முள்ளிவாய்க்கால் முடிவல்ல! என்பதை புரியவைப்போம்!

## சட்டமன்ற உறுப்பினர்- கருணாஸ்.



மே 18 இன அழிப்பின் நினைவு நாள்! வடுக்கள் மாறாத காலம். எம், மனக்காயம் ஆறாத மாதம்! பத்து ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஆனால் இரத்த சகதி அப்பிய மே மாத இருட்டை மறக்க முடியவில்லை.

உலகநாடுகள் ஒன்றாய் கைகோர்த்து ஓர் மனிதகுல பேரவலத்தை நடத்தியது இந்நூற்றாண்டின் வரலாற்றில் மறக்க முடியாத ஒன்று! அரை நூற்றாண்டுகளாக இனவிடுதலைக்காக அறம் வழியாகவும், ஆயுதம் வழியாகவும் போராடிய ஓர் தேசத்தை பின்னுக்குத் தள்ளியது பல தேசிய இனங்கள் வெளிப்படுத்திய தமிழர் பகையின் வெளிப்பாடு! 1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் இனக் கலவரம் தொடுத்து பல்லாயிரக்கணக்கான தமிழர் உயிரினை குடித்தது! இது வரை சிங்கள அரசு கட்டவிழ்த்து விட்ட, வன்முறை மற்றும் போரின் ஊடாக 1.3 மில்லியன் தமிழர்களை நாட்டைவிட்டு வெளியேற்றியிருக்கிறது!

இலங்கை இஸ்லாமிய தமிழர்களிடையே விரிசலை விதைத்து.. மறைமுகமாய் நின்று மதவாதத்தை அனுப்பி குருதி குடித்தது! 90 ஆயிரம் தமிழ்ப் பெண்களை விதவையாக்கியது! உயிரை சுமந்த தாய்மார்களின் கருவறை சென்று கருவறுத்தது!

இறுதிக்கும் இறுதியாய் இன அழிப்பு என்ற இறுதி வேலைத் திட்டத்திற்கே சிங்கள அரசு தமிழர்களை தொடர்ந்து தள்ளிக் கொண்டு போனது! 1980 முதல் 1996 வரை 11,513 தமிழர்களை கடத்தி உலகில் காணாமல் போனவர்களின் பட்டியலில், ஈராக்குக்கு அடுத்த நிலையில் இரண்டாம் இடத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கிறது! இது ஐ.நா அறிக்கை ஒன்று முன் வைக்கும் அசைக்க முடியாத சான்று! 1999 இல் 16,742 தமிழர்களை காணாமல் போகச் செய்தும்! 2019 இல் முள்ளிவாய்க்காலில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை பச்சைப் படுகொலை செய்து, ஒரு இனத்திற்கு எதிரான போரில் பன்னாட்டு போர் மரபையும் மீறி பெண்கள், குழந்தைகள் என தமிழர்களை கொத்துக் கொத்தாக கொன்றொழித்தும், சரணடைந்த போராளிகளை கொன்று குவித்தும், கணக்கில்லா பெண்களை பாலியல் வன்கொடுமை செய்தது! இது இத்துப் போகாத ஆசிய மனித உரிமை ஆணையத்தின் சான்று!

இனப்படுகொலை நடந்தேறி 10 ஆண்டுகள் கடந்து விட்டன. இலங்கை சிங்கள அரசு நடத்தியது இனப்படுகொலைதான் என்பதற்கு பல வகைகளில், அடுக்கடுக்கான ஆதாரங்கள், நேரடி விசாரணைகள் சாட்சிகள் என அனைத்தும் அடுக்கி வைத்த பிறகும் நீதிக்கான விசாரணைக்கு காலம் கடத்தும் காரணமென்ன? ஆனால் ஐ.நா-வின் உள்ளக விசாரணை நீர்த்துப் போகச் செய்வதற்கான அனைத்து வேலைகளையும் பெரும் வலைப்பின்னல் அமைத்து தொடர்ந்து தடுத்து வருகிறது இலங்கை அரசு. இலங்கையில் நடைபெற்றது வெறும்போர்குற்றமோ மனித உரிமை மீறலோ மட்டுமல்லாது அதுதிட்டமிடப்பட்ட இனப்படுகொலை என்பதை ஐ.நா. பொது சபை அறிவிக்க வேண்டும். சர்வதேச விசாரணையும் பொது வாக்கெடுப்புமே தமிழ் மக்களுக்கான ஒரே தீர்வு.

இந்த உறுதிமொழியை நாம் மே 18 ஆம் நாளில் நெஞ்சிலேற்றி தொடர்ந்து மக்கள் திரள் போராட்டம் வழியாக உலக நாடுகளுக்கு எடுத்துரைப்பதே உலகெங்கும் வாழும் தமிழர்களின் தலையாய கடமையாகும்

# ஐக்கியமெனும் உயிர்க்காற்றால் நெருப்பாற்றை நீந்திக் கடப்போம்!

ஒருங்கிணைப்பாளர் ஈழத்தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு - கொளத்தூர் தா.செ.மணி



முள்ளிவாய்க்காலில் நடத்தப்பட்ட 21 ஆம் நூற்றாண்டின் முதற்பெரும் இனவழிப்பின் மரண ஓலம் இன்றளவும் தமிழர் நெஞ்சங்களில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. முள்ளிவாய்க்கால் படுகொலையால் தமிழர்களின் விடுதலை வேட்கைக்கு கல்லறை கட்ட நினைத்தது சிங்களப் பேரினவாதம்.ஆனால் ‘முள்ளிவாய்க்கால் முடிவல்ல’ என்று காட்டிநிற்கின்றன இந்த பத்தாண்டுகள். திரு விக்னேஸ்வரன் தலைமையிலான வட மாகாணசபையும் தமிழக சட்டசபையும் பன்னாட்டுப் புலனாய்வை வலியுறுத்தி இயற்றிய தீர்மானங்கள் தமிழர்களின் உறுதிக்கு சான்று. 2009 இல் இலங்கைக்குப் பாராட்டுப் பட்டயம் வாசித்த ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் பன்னாட்டு சட்டமீறலுக்கான பொறுப்புக்கூறல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வல்லரசுகள் தொடங்கி உள்ளூர் ஆட்சியாளர்கள் வரை தத்தமது நலன்களில் இருந்து காய்நகர்த்தினாலும் தமிழரின் அறவலிமையும் போராட்டமும் இவற்றுக்கு அடிப்படையாய் அமைந்துள்ளன. எதுவுமே நடக்கவில்லை என்பது மேலோட்டமான மதிப்பீடு. இரணில் இராசபக்ச முரண்பாடு கடந்த ஆண்டு இறுதியில் கொதிநிலை அடைந்தமைக்குப் பின்புலமாய் இருப்பது தமிழர்களின் போராட்டமே. எதிரியின் இலக்குகளுக்கு குறிதப்பாமல் சேவை செய்து பன்னாட்டுப் புலனாய்வு காணாமலாக்கப்பட்டோர் பிரச்சனை என தமிழரின் கோரிக்கைகளைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் காயடித்தனர். இப்பத்தாண்டுகள் விலைபோன தமிழ்த் தலைவர்களை அடையாளம் காட்டியுள்ளன. இதற்கிடையே மேற்குலகுக்கும் மேற்காசியாவுக்குமான போரும் ஈஸ்டர் தாக்குதலாய் இலங்கையில் வெடித்துவிட்டது. இனி பேரினவாதம் தென்னிலங்கை முஸ்லிம்களையும் தமிழீழப் பகுதியில் வாழும் முஸ்லிம்களையும் விட்டுவைக்கப் போவதில்லை. இந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராக முஸ்லிம்களுடன் நிற்க வேண்டும் தமிழர்கள். கடினமே என்றாலும் தமிழ்-முஸ்லிம் ஐக்கியம் வரலாற்றின் கட்டளை.


முள்ளிவாய்க்கால் இரத்தக் கறையைத் தமிழர்களின் இரத்தத்தாலேயே கழுவப் பார்க்கும் இலங்கை. இதை முறியடித்து பன்னாட்டுப் புலனாய்வுக்கானப் போராட்டத்தை மீண்டும் நிகழ்ச்சி நிரலாக்க வேண்டும். இராசபக்சவின் கைகள் மேலும் ஓங்கப்போகின்றன. அவசரகால ஆட்சியின்கீழ் சிங்களக் குடியேற்றங்கள் தீவிரப்படும். இவற்றை முறியடித்து வடக்குகிழக்கு நிலத்தொடர்ச்சியையும் சிங்களக் குடியேற்றங்களில் இருந்து தாயகத்தையும் காப்பாற்றியாக வேண்டும். பிரதேச ஐக்கியத்தைப் பேண வேண்டும். இவையெல்லாவற்றையும் செய்ய உறுதிமிக்க அரசியல் தலைமையாக ஐக்கிய முன்னணி ஒன்று கட்டப்பட வேண்டும். சோரம்போன தமிழ்த்தலைவர்களை விலக்கி வைத்து கோரிக்கை அடிப்படையில் ஏனையவர்கள் ஐக்கியப்பட வேண்டும். ஐக்கிய முன்னணி தொடர்பில் கடந்த கால பட்டறிவை உட்செறித்து முள்ளிவாய்க்காலையும் தொடரும் கட்டமைப்புரீதியான இன அழிப்பையும் மாவீரர்களின் ஈகத்தையும் எண்ணி பரந்த மனத்துடன் ஒன்றுபடவேண்டும். வரலாறு தமிழர்களை நெருப்பாற்றில் முக்கி எடுக்கின்றது. சாம்பலில் இருந்து மீண்டெழ சாத்தியமாக்க வேண்டும் ஐக்கியத்தை.

# நிமிர்வோம் வெல்வோம். வ.கௌதமன் - தமிழ் பேரரசு கட்சி.



மே 18 தமிழனாக பிறந்த எவரும் மறக்க முடியாத நாள். உறுதியான, இறுதியான ஒரு தீர்வு, தனித் தமிழீழம் வரும் வரைக்கும் மறக்கக்கூடாத ஒரு நாள். ஒருவர் இருவரல்ல, நூறு பேர் ஐநூறு பேர் அல்ல, ஆயிரம் பேர் ஐயாயிரம் பேரல்ல, ஒன்றரை இலட்சம் தமிழீழ உறவுகள் கதறி சிதறி நம்முடைய முள்ளிவாய்க்கால் மண்ணில் கடலில் கரைந்த நாள். நந்திக்கடல் செங்கடலாக மாறிய அந்த நாளை எப்படி மறக்க முடியும்?. நம்முடைய அப்பா அம்மா மட்டுமில்ல அத்தை மாமா மட்டுமில்ல தாத்தா பாட்டி உடன் பிறந்த சகோதர சகோதரி மட்டுமில்ல எங்கள் வீட்டு பிஞ்சு குழந்தைகளின் கைவிரல்கள் சிதறிய நாள். அந்த சின்னஞ்சிறிய கண்கள் சிதறி சிதறி எங்கள் மண்ணோடு மண்ணாக கலந்த நாள். அந்த அழகழகான இதழ்கள் துடிதுடித்து அடங்கிய அந்த நாளை தமிழனாக பிறந்த ஒவ்வொருவரும் நெஞ்சில் ஏந்தி ஒரு நிரந்தர தீர்வு வருகிற வரை அயர்ந்துபோகாமல், சோர்ந்து போகாமல், உறுதியோடு நம்பிக்கையோடு போராடி உலகம் தனித்தமிழீழத்தை அங்கீகரித்து அறிவிக்கின்ற வரைக்கும் போராடிகொண்டே இருக்கின்ற ஒரு நாளாகத்தான் மே 18னை பார்க்கின்றேன். என்னை போன்ற தமிழனுக்கு சொல்லமுடியாத குமுறலையும் பெரும் கோபத்தையும் கொடுக்கிற ஒரு நாளாகத்தான் இந்த நாளை இதயத்தில் பதிகின்றேன். அப்படிதான் இந்த இனத்தில் பிறந்த ஒவ்வொருவரும் குறிப்பாக இளையத்தலைமுறையினர் மனதில் உறுதி ஏற்க வேண்டும் என்று உரிமையோடு வேண்டுகிறேன். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடந்து பத்தாண்டுகள் கடந்து விட்டது. நானும் பலமுறை ஐநாவில் பேசி இருக்கிறேன். parisut of justice ( இடைவிடாத நீதியின் தேடல்) channel 4க்கு பிறகு நான் செய்த ஆவணபடம் அங்கு திரையிடப்பட்டிருக்கிறது. பல மனித உரிமையாளர்களை அப்படைப்பு கதறி அழ செய்திருக்கின்றது. ஐநா நமக்கான நீதியினை தள்ளிபோடலாம். காலம் தாழ்த்தலாம். ஆனால் ஐம்பது ஆயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்ட நம் இனம் தமிழீழத்தை அடையாமல் ஒருபோதும் ஓயாது. அதற்கான முற்றும் முழுதான பொறுப்பை எங்களுடைய இளையத்தலைமுறை உறுதிசெய்யும். காலமும் இயற்கையும் அதற்கான சூழலை உருவாக்கும். அதுவரை அந்த நெருப்பை அணையாமல் பாதுகாப்பது நம்முடைய கடமை மட்டுமல்ல நம்முடைய உறுதியான செயல் திட்டமாகவும் இருக்க வேண்டும்.

# விதைந்த உயிர்கள் விடுதலையாக விளைவதே வரலாற்று ஏரணம்.




இராசபட்சே தலைமையிலான சிங்களப் பேரினவாத அரசு நடத்திய இனக்கொலைப் போர் முள்ளிவாய்க்காலில் உச்சம் கண்டு பல்லாயிரம் தமிழ்மக்கள் துள்ளத்துடிக்கக் கொல்லப்பட்ட அவலம் நிகழ்ந்து பத்தாண்டு நிறைவு பெறுகிறது.

இந்த இனக்கொலையைத் தடுக்க எவ்வளவு முயன்றும் முடியவில்லை என்பது ஈழத் தமிழர்களின் தோல்வி மட்டுமன்று, தமிழகத் தமிழர்கள் உள்ளிட்ட உலகத் தமிழினத்தின் வரலாற்றுத் தோல்வியாகும். தமிழின அழிப்புக்கு நீதி கோரும் போராட்டம் ஐநா மன்றத்திலும் பன்னாட்டு அரங்கிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழகத்திலும் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். அனைத்துக்கும் மேலாகத் தமிழீழத் தாயகத்தில் சிங்கள இராணுவ வல்லிருப்பையும் மீறித் தமிழீழ மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஐநா மாந்தவுரிமைப் பேரவையில் அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒப்புக்குச் சில தீர்மானங்களும் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் இனவழிப்புக் குற்றத்துக்காகவோ, போர்க் குற்றங்களுக்காகவோ இது வரை ஒரே ஒருவர் கூடக் கூண்டிலேற்றப்படவில்லை. அது மட்டுமன்று, நடந்தது இனவழிப்பு என்பதை உலக நாடுகளில் ஒன்று கூட ஏற்றுக் கொள்ளவில்லை. இனவழிப்புக் குற்றத்துக்காகச் சிங்கள அரசை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டிக்கும் வரை நமக்கு ஓய்வில்லை.

தமிழினத்தின் உரிமைக் குரலை முள்ளிவாய்க்காலில் மூழ்கடிக்கும் சிங்கள அரசின் முயற்சி தோற்று விட்டது. மறுபுறம், தமிழீழ விடுதலைக் குறிக்கோளை மடைமாற்றும் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்கும் முயற்சியும் தோற்று விட்டது. இருபெரும் சிங்களக் கட்சிகளும் சேர்ந்து உருவாக்கிய தேசிய அரசு, நல்லாட்சி அரசு எல்லாம் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குப் போய் விட்டன. புதிய அரசமைப்புச் சட்டத்தின் ஊடாக சமஷ்டித் தீர்வு அல்லது அது போன்ற ஒன்று என வாயளந்து கொண்டிருந்த நாடாளுமன்றத் தமிழ்த் தலைமையின் கனவு கலைந்து விட்டது. இழந்த நிலத்தை மீட்கவும், போர்க் கைதிகளின் விடுதலைக்காகவும், காணாமல் போன உறவுகளைக் கண்டுபிடிக்கவும், இனவழிப்புக்கு நீதி கோரியும் தமிழீழ மக்களின் போராட்டம் ஓய்ந்துவிடவில்லை. தமிழீழ மக்களின் மறுபகுதியான புலம்பெயர் தமிழர்களும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் முதலான புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் நடத்திவரும் போராட்டமும் ஓய்ந்துவிடவில்லை, ஈழத் தமிழர்களோடு தோழமை கொண்டு தமிழகம் நடத்தி வரும் போராட்டமும் ஓயப் போவதில்லை. இனவழிப்புக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டால் போதாது. இனவழிப்பின் வேராகிய இன ஒடுக்குமுறை களையப்பட வேண்டும். அதற்காகப் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பது தமிழ்மக்களின் ஒருமித்த கோரிக்கை. இந்தப் பொதுவாக்கெடுப்பு வழியாகத் தமிழீழம் மலரும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். முள்ளிவாய்க்காலில் விதைந்த உயிர்கள் விடுதலையாக விளைவதே வரலாற்று ஏரணம்.

# தாயகத்தில்.. முள்ளிவாய்க்கால் மண்ணில்







மட்டக்களப்பில்

திருகோணமலையில்

வவுனியா பொங்குதமிழ் மண்டபத்தில்

யாழ் பல்கலைக்கழகத்தில்

மன்னாரில்







# புலம்பெயர் தேசத்தில்

பிரித்தானியாவில்




டென்மார்க்கில்




நியூசிலாந்தில்



வரலாற்று மையத்தில்




ஜேர்மனியில்



சுவிஸ்சில்



ஸ்காட்லாந்தில்



பிரான்சு லாச்சப்பலில்




# தமிழகத்தில்

தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றம்



வி.சி.க கட்சி ஏற்பாட்டில்



தமிழக வாழ்வுரிமை கட்சி ஏற்பாட்டில்



நாம் தமிழர் கட்சி ஏற்பாட்டில்



ம.தி.மு.க கட்சி ஏற்பாட்டில்

